ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 17.] ப்ரபவஹூ, வைகாசிமீ [ஸஞ்சிகை 8

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே ।
வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா

[ ஸ்ரீ பாகவதம். 1-9-23 ]

ஸ்ரீ:

## ஸ்ரீ பாஞ்சராத்ரம்

(ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்.)

வேதத்தின் ஜ்ஞாந காண்டமாகிற உபநிஷத்துக்களின் அர்த்தத்தைப் பகவான் பாதராயணர் ஸூத்ரரூபமாக விசாரித்திருக்கிறார். இந்த ஸூத்ரங்கள் ப்ரஹ்மத்தைப்பற்றியே விசாரிக்கிறபடியால் இவைகளுக்கு ப்ரஹ்ம ஸூத்ரங்கள் என்று பெயர் வழங்கி வருகின்றது. இவைகள் நாலு அத்யாயங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு அத்யாயமும் நன்னான்கு பாதம் அடங்கியுள்ளது. முதல் அத்யாயத்தில், ஸகல வேதாந்த வாக்யங்களும் ஸர்வஜ்ஞத்வம் முதலிய கல்யாண குணங்களுடன் கூடியிருக்கும் பரப்ரஹ்மத்தையே ஜகத்காரணமாக ப்ரதிபாதிக்கின்றனவென்பது ஸ்தாபிக்கப்படுகின்றது. இரண்டாவது அத்யாயத்தில், இந்த அர்த்தம் ஸாங்க்யம் முதலிய ஸ்ம்ருதிகளுக்கும் ந்யாயத்திற்கும் விருத்தமாக இருப்பதுபோலத் தோன்றுவதால் இதற்கு ப்ரஸங்கிக்கும் தோஷமெல்லாம் பரிஹரிக்கப்பட்டு, ஸாங்க்யம் முதலான பக்ஷங்கள் ப்ரதிக்ஷேபிக்கவும் படுகின்றன; வேதாந்த வாக்யங்களுக்குள் பரஸ்பர விப்ரதிஷேத கந்த லேசமும் இல்லையென்பதும் ஸ்திரீகரிக்கப்படுகின்றது. மற்றை இரண்டு அத்யாயங்களில், பர ப்ரஹ்மத்தை

உபாஸிக்கும் ப்ரகாரமும் அதன் பலமாயுள்ள மோக்ஷத்தின் ஸ்வரூபமும் விசாரிக்கப்படுகின்றன. இது இந்த ஸூத்ரங்களிற் சொல்லப்பட்டுள்ள விஷயங்களின் ஸங்க்ரஹம்.

இதில் இரண்டாவது அத்யாயம் இரண்டாவது பாதத்தின் கடைசியில், பின்வரும் நாலு ஸூத்ரங்கள் காணப்படுகின்றன.

"உத்பத்த்யஸம்பவாத் ।
ந ச கர்த்து: கரணம் ।
விஜ்ஞாநாதிபாவே வா தத³ப்ரதிஷேத⁴: ।
விப்ரதிஷேதா⁴ச்ச ॥"

இந்த நாலு ஸூத்ரங்களும் பாஞ்சராத்ரத்தை விஷயமாகக் கொண்டவை என்பதைக் காண்பிக்கும் சப்தங்கள் அவைகளிற் காணப்படாமற் போனாலும், பாஷ்யக்காரர்களுக்குள் இந்த நாலு ஸூத்ரங்களுக்கும் பாஞ்சராத்ரமே விஷயம் என்பதைப் பற்றி எவ்வித விப்ரதிபத்தியும் இல்லை. ஆனால், ஸ்ரீசங்கராசார்யர் இந்த நாலு ஸூத்ரங்களாலும் பாஞ்சராத்ரத்தின் ப்ராமாண்யம் நிராகரிக்கப்படுகின்றதென்றும், ஸ்ரீ யாமுநாசார்யர் முதலான ஸ்ரீ வைஷ்ணவாசார்யர்க ளெல்லாரும் முதல் இரண்டு ஸூத்ரங்களால் பாஞ்சராத்ரத்தின் ப்ராமாண்யம் சங்கிக்கப்பட்டு மற்றை இரண்டு ஸூத்ரங்களால் அது ஸ்தாபிக்கப் படுகின்றதென்றும் விவரித்திருக்கிறார்கள். இந்த அர்த்த பேதம் ஏற்பட்டு நிர்விவாதமாக ஆயிரம் வருஷங்கள் ஆகிவிட்டன; இன்னமும் அந்த அர்த்தத்தைப் பற்றிய விவாதம் சாந்தமாகவில்லை என்பது அத்யாச்சர்யகரமே.

இந்த ஸூத்ரங்கள் அடங்கியுள்ள இந்தப் பாதத்தில், ஸூத்ரக்காரர் பர பக்ஷ ப்ரதிக்ஷேபம் செய்ய ஆரம்பித்து முதலில் வேதத்தின் ப்ராமாண்யத்தை அங்கீகரியாமலிருக்கும் காபில காணாத ஸௌகத ஆர்ஹத மதங்களை நிரஸநம் செய்து, பிறகு வேத விருத்தமாயுள்ள பசுபதி மதமும் அநாதரிக்கத்தக்கதே என்று உபபாதித்துவிட்டு, கடைசியாக இந்தப் பாஞ்சராத்ர மதத்தை ப்ரஸ்தாவிக்கிறார். பரபக்ஷ ப்ரதிக்ஷேபத்தை விஷயமாயுடைத்தாயிருக்கும் இந்தப் பாதத்தில் பாஞ்சராத்ரம் ப்ரஸ்தாவிக்கப்பட்டிருக்கிறபடியால், இதுவும் ப்ரதிக்ஷேபிக்கத் தகுந்த மதங்களுள் ஒன்றாகவே ஸூத்ரக்காரரால் க்ரஹிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது ஸ்ரீ சங்கராசார்யருடைய அபிப்ராயம். ப்ரதிக்ஷேபிக்கத்தகுந்த மதங்களெல்லாவற்றையும் ப்ரதிக்ஷேபித்த பிறகு, கடைசியாக, 'ஒருகால் இதர மதங்கள் போல பாஞ்சராத்ர மதமும் அப்ரமாணம் என்று ஸாமாந்ய ஜநங்கள் க்ரஹித்து விடுவார்களோ' என்று எண்ணி, ஸூத்ரக்காரர், முதலில் அதில்

அப்ராமாண்ய சங்கையைச் செய்து, பிறகு அதை ஸ்தாபிக்கிறார் என்பது ஸ்ரீவைஷ்ணவாசார்யர்களுடைய அபிப்ராயம். இப்படி ஸ்ரீவைஷ்ணவாசார்யர்கள் அபிப்ராயப்படுவதற்கு முக்யமான காரணம் என்னவென்றால்--'ஸூத்ரம் செய்தவர் பகவான் பாதராயணர் என்று சொல்லப்படும் வ்யாஸ மஹர்ஷி, அவரே ஸ்ரீ பாரதத்திற்கும் கர்த்தா. ஸ்ரீ பாரதத்தில் அநேக வசநங்களால் அநேக ஸ்தலங்களில் பாஞ்சராத்ர ப்ராமாண்யத்தை அவர் ஸ்தாபித்திருக்கிறார். அப்படி அந்த க்ரந்தத்தில் அதை ஸ்தாபித்துவிட்டு தம்முடைய மற்றொரு க்ரந்தமாகிற ஸூத்ரத்தில் அதை நிராகரிக்கிறார் என்று சொல்வது அத்யந்தம் அஸங்கதம்' என்பதுதான்.

ஸூத்ரங்களுடைய அர்த்தத்தைக் கவனிப்போம். ஸ்ரீ சங்கராசார்யருடைய அர்த்தமாவது:—உத்பத்த்யஸம்பவாத்—உத்பத்தி ஸம்பவிக்காதாகையால். (அதாவது-ஜீவனுக்கு உத்பத்தி ஸம்பவிக்காதாகையால், அதற்கு உத்பத்தியைச் சொல்லும் இந்தக் கல்பனை அஸங்கதம்). பாஞ்சராத்ரத்தில் 'வாஸுதேவனிடமிருந்து ஸங்கர்ஷணன் என்னப்படும் ஜீவன் உத்பந்நமாகிறது; ஸங்கர்ஷணனிடமிருந்து ப்ரத்யும்நன் என்னப்படும் மநஸ் உத்பந்நமாகிறது; ப்ரத்யும்நனிடமிருந்து அநிருத்தன் என்னப்படும் அஹங்காரம் உத்பந்நமாகிறது'—என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அதில் ஜீவனுக்கு உத்பத்திசொல்வது வேத விருத்தம், வேதத்தில் ஜீவன் நித்யன் என்று சொல்லப்பட்டிருக்கிறபடியால். இப்படி வேதவிருத்தமாக ஜீவனுக்கு உத்பத்தியைப் போதிக்கும் இந்தக் கல்பனை அஸங்கதம்.

இரண்டாவது ஸூத்ரம்—ந ச கர்து: கரணம்—கர்த்தாவினிடமிருந்து கரணம் உத்பந்நமாகாதாகையாலும். (அதாவது—எந்தக் கரணத்தைக் கொண்டு ஒரு கர்த்தா தன்னால் செய்யப்படக்கூடும் கார்யத்தைச் செய்ய வேண்டுமோ, அந்தக் கரணம் அந்தக் கர்த்தாவின் கார்யத்தால் உத்பந்நமாகாதாகையாலும் அப்படி கரணம் உத்பந்நமாகின்றது என்று சொல்லும் பாஞ்சராத்ரம் அஸங்கதம். பாஞ்சராத்ரத்தில் 'ஸங்கர்ஷணனாகிற ஜீவனிடமிருந்து ப்ரத்யும்நனாகிற மநஸ் உத்பந்நமாகிறது' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விடத்தில் ஜீவன் கர்த்தா. ஜீவன் மநஸ்ஸைக் கொண்டே ஸகல கார்யங்களையும் செய்ய வேண்டுமாகையால், மநஸ் அவனுக்குக் கரணமாகின்றது. அந்த மநஸ்ஸை அந்த ஜீவன் உத்பத்தி செய்கிறான் என்று சொல்வது பொருந்தாதன்றோ? ஏனென்றால்—ஒரு ஜீவன் ஒரு பதார்த்தத்திற்கு உத்பத்தியைச் செய்வது என்னும் கார்யத்தை ஆரம்பித்தால் அந்தக் கார்யத்தைச் செய்வதற்கு மநஸ் என்னும் கரணம் அவனுக்கு அவச்யம் அபேக்ஷிதம்; அந்த மநஸ்ஸை அவன் உத்பத்தி செய்கிறான் என்று சொல்வது எப்படி ஸங்கதமாகும்? தவிரவும்,

'மநஸ் முதலியவை பரமாத்மாவினிட மிருந்தே உத்பந்நங்கள்' என்று வேதத்திற் சொல்லப்பட் டிருக்கின்றது. அதற்கும் இது விருத்தம். இந்தக் காரணங்களாலும் இந்தக் கல்பனை அஸங்கதம்.

மூன்றாவது ஸூத்ரம்—விஜ்ஞாநாதிபாவே வா ததப்ரதிஷேத:—ப்ரஹ்ம பாவத்தை அங்கீகரித்தபோதிலும் அது அப்ரதிஷித்தமாகவே இருக்கிறது. (அதாவது—'ஸங்கர்ஷண ப்ரத்யும்ந அநிருத்தர்களெல்லாரும் பரமாத்மாக்களே; அவர்களை ஜீவன் மநஸ் அஹங்காரமென்று சொல்வதற்கு, அவர்கள் அவைகளுக்கு அதிஷ்டாதாக்களாக இருக்கிறார்கள் என்பதுதான் அர்த்தம்' என்று சொன்ன போதிலும் கீழ்க்கூறப்பட்டுள்ள உத்பத்ய ஸம்பவ ரூபமான தோஷம் ப்ராப்தமாகின்றது). இப்படி ஸங்கர்ஷணன் முதலான எல்லா வ்யூஹங்களையும் பரமாத்மா வென்றே சொல்லிவிட்டால் உத்பத்ய ஸம்பவ ரூபமான தோஷம் எப்படி ப்ராப்தமாகுமென்னில், இந்த உத்பத்ய ஸம்பவம் முதல் ஸூத்ரத்திற் சொல்லப்பட்டுள்ள ஜீவோத்பத்ய ஸம்பவ மன்று; இரண்டாவது ஸூத்ரத்திற் சொல்லப்பட்டுள்ள கர்த்தாவினிடமிருந்து கரணத்தினுடைய உத்பத்ய ஸம்பவமுமன்று; இது வேறொரு உத்பத்ய ஸம்பவம்' என்று நிர்வாஹம் செய்யப்பட் டிருக்கின்றது. அது என்னவென்றால், 'லோகத்தில் ஒரு வஸ்துவிலிருந்து மற்றொரு வஸ்து உத்பந்நமானால், இரண்டுக்கும் குணாதிசயம் காணப்படுகின்றது என்பது ப்ரஸித்தம். ப்ரக்ருதத்தில் ஸங்கர்ஷண ப்ரத்யும்ந அநிருத்தராகிய மூன்று பெயரும் எவ்வித குணாதிசயமும் இல்லாமல் துல்யமான தர்மங்களை உடையோர் என்று ஒத்துக் கொண்டிருக்கிறபடியால் ஒருவரிடத்திலிருந்து மற்றொருவர் உத்பந்நராகிறார் என்று சொல்வதற்குஸாத்யமில்லையே' என்பதுதான். ஆகையால் உத்பத்ய ஸம்பவரூப தோஷம் ப்ராப்தமாகின்றது.

நான்காவது ஸூத்ரம்—விப்ரதிஷேதாச்ச—விப்ரதிஷேதம் காணப்படுகிற படியாலும். (அதாவது-இந்தப் பாஞ்சராத்ரத்தில் பூர்வாபர விரோதமும் வேத விரோதமுமான விப்ரதி ஷேதங்கள் காணப்படுகிறபடியால் இது அஸங்கதம்). ஒரு இடத்தில் பகவான் ஜ்ஞாநத்தை ஸ்வரூபமாக உடைத்தாயிருக்கிறான் என்றும் மற்றோரிடத்தில் ஜ்ஞாநத்தைக் குணமாக உடைத்தாயிருக்கிறான் என்றும் பாஞ்சராத்ரம் சொல்லுகிறது. இது பூர்வாபர விரோதத்திற்கு உதாஹரணம். மற்றொரு இடத்தில், சாண்டில்யர் என்னப்படும் ஒருவர் நாலு வேதங்களிலும் பரமமான ச்ரேயஸ்ஸைத் தேடி அதை அவைகளிலிருந்து அடையாமல், பாஞ்சராத்ரத்தை அத்யயநம் செய்து அதனிடமிருந்து அந்த ச்ரேயஸ்ஸை அவர் அடைந்தார் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இது வேத விரோதத்திற்கு நிதர்சநம். இம்மாதிரியான விப்ரதிஷேதங்கள் காணப்படுகிறபடியாலும் இந்தக் கல்பனை அஸங்கதம்.

நித்யனான ஜீவனுக்கு உத்பத்தி ஸம்பவிக்காதாகையால் இந்தப் பாஞ்சராத்ர கல்பனை அஸங்கதம் என்பது முதல் ஸூத்ரத்தின் அர்த்தம். கர்த்தாவினிடமிருந்து கரணத்தின் உத்பத்தி ஸம்பவிக்காதாகையால் இது அஸங்கதம் என்பது இரண்டாவது ஸூத்ரத்தின் அர்த்தம். ஸங்கர்ஷணன் முதலானவர்களுக்குப் பரமாத்ம பாவம் சொன்னபோதிலும், உத்பத்ய ஸம்பவ தோஷம் வருகின்றது என்பது மூன்றாவது ஸூத்ரத்தின் அர்த்தம். பாஞ்சராத்ர க்ரந்தங்களில் பூர்வாபர விரோதமும் வேதநிந்தையும் காணப்படுகிறபடியாலும் இந்தக் கல்பனை அஸங்கதம் என்பது நாலாவது ஸூத்ரத்தின் அர்த்தம். ஸூத்ரங்களின் வாக்ய பூர்த்தி பின்வருமாறு நிற்கின்றது;

1. 𑌉𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑍍𑌯𑌸𑌂𑌭𑌵𑌾𑌤𑍍—𑌨𑌿𑌤𑍍𑌯𑌸𑍍𑌯 𑌜𑍀𑌵𑌸𑍍𑌯 𑌉𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑍍𑌯𑌸𑌂𑌭𑌵𑌾𑌤𑍍 𑌏𑌷𑌾 𑌕𑌲𑍍𑌪𑌨𑌾 𑌅𑌸𑌂𑌗𑌤𑌾 ।

2. 𑌨 𑌚 𑌕𑌰𑍍𑌤𑍁𑌃 𑌕𑌰𑌣𑌮𑍍—𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌕𑌰𑍍𑌤𑍁𑌃 𑌕𑌰𑌣𑌂 𑌉𑌤𑍍𑌪𑌦𑍍𑌯𑌮𑌾𑌨𑌂 𑌨 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇, 𑌅𑌤𑌶𑍍𑌚𑌾𑌸𑌂𑌗𑌤𑌾 𑌏𑌷𑌾 𑌕𑌲𑍍𑌪𑌨𑌾 ।

3. 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌦𑌿𑌭𑌾𑌵𑍇 𑌵𑌾 𑌤𑌦𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍇𑌧𑌃—𑌸𑌂𑌕𑌰𑍍𑌷𑌣𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌦𑌿𑌭𑌾𑌵𑍇𑌽𑌪𑌿 𑌉𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑍍𑌯𑌸𑌂𑌭𑌵𑌸𑍍𑌯𑌾𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍇𑌧𑌃 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 ।

4. 𑌵𑌿𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍇𑌧𑌾𑌚𑍍𑌚—𑌅𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌉𑌪𑌲𑌭𑍍𑌯𑌮𑌾𑌨𑌾𑌤𑍍 𑌵𑌿𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍇𑌧𑌾𑌚𑍍𑌚 𑌏𑌷𑌾 𑌕𑌲𑍍𑌪𑌨𑌾 𑌅𑌸𑌂𑌗𑌤𑌾 ।

இந்த ஸூத்ரங்களுக்கு ஸ்ரீவைஷ்ணவாசார்யர்களுடைய பாஷ்யம் என்னவென்றால்—

ஸ்ரீ ஸூத்ரக்காரர், பாஞ்சராத்ரம் என்னும் தந்த்ரம் பாசுபதம் முதலிய தந்த்ரங்கள்போல ஒரு தந்த்ரமாக இருக்கிறபடியால் அதில் ஒரு அப்ராமாண்யத்தைச் சங்கித்து, அந்த அப்ராமாண்ய சங்கையை ப்ரமாண் புரஸ்ஸரமாக நிராகரிக்கிறார். 'பாஞ்சராத்ரத்தில் ஜீவனுடைய உத்பத்தி சொல்லப்படுகின்றது; அது ச்ருதி விருத்தம்; ஆகையால் பாஞ்சராத்ரம் ப்ரமாணமன்று' என்பது முதல் சங்கை.

'பாஞ்சராத்ரத்தில் கர்த்தாவாகிற ஜீவனிடத்திலிருந்து கரணமாகிற மநஸ்ஸின் உத்பத்தி சொல்லப்படுகின்றது, இது அஸங்கதம்; பர ப்ரஹ்மத்தினிடத்திலிருந்தே மநஸ்ஸின் உத்பத்தியைச் சொல்லும் ச்ருதிக்கும் விருத்தம்; ஆகையால் பாஞ்சராத்ரத்தின் ப்ராமாண்யம் ப்ரதிஷேதிக்கப்படுகின்றது' என்பது இரண்டாவது சங்கை. இந்த இரண்டு சங்கைகளும் முதல் இரண்டு ஸூத்ரங்களால் விவரிக்கப்பட்டன.

மூன்றாவது ஸூத்ரம்—"விஜ்ஞாநாதி³பா⁴வே வா தத³ப்ரதிஷேத⁴꞉" இதில் 'வா' என்னும் சப்தம் பக்ஷத்தைத் திருப்புகிறது. விஜ்ஞாநம் ச தத் ஆதி³ ச விஜ்ஞாநாதி³; அதாவது-பரமாத்மா. அத³ என்னும் தாதுவுக்கு பக்ஷணம் என்பது பொருள். பரமாத்மா ஸகல ஜகத்துக்கும் ஸம்ஹர்த்தாவாக இருந்து கொண்டும் ஜகத் காரணமாகிறபடியால், அவனை 'ஆதி³' (பக்ஷிக்கிறவன்) என்று சொல்வது உபபந்நம். ஆகையால் 'விஜ்ஞாநாதி³பா⁴வே' என்பதற்கு 'பரப்ரஹ்மத்தின் தன்மை இருக்கும்பொழுது' என்பது அர்த்தம். அதாவது—'ஸங்கர்ஷண ப்ரத்யும்ந அநிருத்தர்கள் பரப்ரஹ்மமாகவே இருக்கும் பக்ஷத்தில்' என்று சொன்னதாயிற்று. அப்பொழுது 'தத³ப்ரதிஷேத⁴꞉', அந்தச் சாஸ்த்ரத்தின் ப்ராமாண்யம் ப்ரதிஷேதிக்கப்படவில்லை. பாஞ்சராத்ரத்தில், 'வாஸுதேவன் என்று சொல்லப்படும் பரப்ரஹ்மமே, ஆச்ரிதர்களிடத்தில் தனக்கு இருக்கும் வாத்ஸல்யத்தால், தன்னை அவர்கள் ஆச்ரயிப்பதன் ஸௌகர்யத்தை உத்தேசித்து, தனது ஸங்கல்பத்தாலேயே தன்னை நாலு விதமாக வ்யூஹித்துக் கொண்டு நிற்கிறான்' என்றன்றோ சொல்லப்பட்டிருக்கின்றது? இவ்விதம் ஸங்கர்ஷணன் முதலான வ்யூஹங்கள் ப்ரஸித்த ஜீவாதிகளாக இராமல் பரப்ரஹ்மத்தின் ஸ்வேச்சாக்ருஹீத ரூபங்களாக இருந்தால், உத்பத்தியின் அஸம்பவ ரூபமான தோஷத்தைப் பாஞ்சராத்ரத்தின்மீது சொல்வதற்கு அவகாசம் இல்லை. ஆகையால் அதன் ப்ராமாண்யம் அப்ரதிஷித்தம். ஸங்கர்ஷணாதிகளை ஜீவாதி சப்தங்களால் வ்யவஹரிப்பதும் சரீரிகளை சரீர வாசிகளான சப்தங்களால் வ்யவஹரிப்பதுபோல ஸங்கதமே.

நாலாவது ஸூத்ரம்—"விப்ரதிஷேதா⁴ச்ச". பாஞ்சராத்ரத்தின் உண்மையான ப்ரக்ரியையை அறியாமல், 'அநாதியான ஜீவனுக்கு உத்பத்தியைச் சொல்லுகின்றது இந்தத் தந்த்ரம்' என்றன்றோ பூர்வபக்ஷிகள் இதன் அப்ராமாண்யத்தை சங்கித்தார்கள்? அந்த ஜீவனுடைய உத்பத்தி இந்தத் தந்த்ரத்திலேயே விப்ரதிஷேதிக்கப் படுகின்றதாகையாலும் இந்தத் தந்த்ரத்தின் ப்ராமாண்யம் ப்ரதிஷேதிக்கத்தகாதது. இதுதான் இந்த ஸூத்ரங்களுக்கு ஸ்ரீ. வைஷ்ணவாசார்யர்களாற் செய்யப்பட்டுள்ள பாஷ்யம்.

ஸூத்ரங்களின் வாக்ய பூர்த்தியாவது—

1. உத்பத்த்யஸம்ப⁴வாத்—நித்யஸ்ய ஜீவஸ்ய உத்பத்த்யஸம்ப⁴வாத் பாஞ்சராத்ரஸ்ய ப்ராமாண்யம் ப்ரதிஷித்⁴யதே ।

2. ந ச கர்து꞉ கரணம்—ப்ரயோஜ்யாக்ஷ கர்து꞉ கரணம் நோத்பத்³யதே தஸ்மாத் அஸ்ய ப்ராமாண்யம் ப்ரதிஷித்⁴யதே ।

3. விஜ்ஞாநாதிபாவே வா ததப்ரதிஷேத:—ஸங்கர்ஷணாதீநாம் விஜ்ஞாநாதிபாவே வா (வா பக்ஷம் விபரிவர்த்தயதி), தஸ்ய ப்ராமாண்யஸ்யா ப்ரதிஷேத: ।

4. விப்ரதிஷேதாச்ச—அஸ்மிந்நேவ ஶாஸ்த்ரே ஜீவோத்பத்தே: விப்ரதிஷேதாச்ச தஸ்ய ப்ராமாண்யஸ்யா ப்ரதிஷேத: ।

ஸ்ரீசங்கராசார்யருடைய பாஷ்யத்தில் நாலும் ஸித்தாந்த ஸூத்ரங்கள்; ஸ்ரீ வைஷ்ணவாசார்யர்களுடைய பாஷ்யத்தில் முதல் இரண்டும் பூர்வபக்ஷ ஸூத்ரங்கள், மூன்றாவதும் நாலாவதும் ஸித்தாந்த ஸூத்ரங்கள். மூன்றாவது ஸூத்ரத்திலுள்ள 'வா' என்பதற்கு 'அபி' என்று ஸ்ரீசங்கராசார்யர் அர்த்தம் செய்திருக்கிறார்; ஸ்ரீவைஷ்ணவாசார்யர்களோ, அந்த 'வா' என்பது பக்ஷத்தை விபரிவர்த்திக்கின்றது என்று சொல்லுகிறார்கள். வாக்ய பூர்த்தியைச் செய்வதிலும் பேதம் காணப்படுகின்றது. ஏஷா கல்பநா அஸங்கதா என்று சேர்த்து முதல் இரண்டு ஸூத்ரங்களுக்கும் நாலாவது ஸூத்ரத்திற்கும் வாக்ய பூர்த்தியை ஸ்ரீசங்கராசார்யர் செய்கிறார். ஸ்ரீவைஷ்ணவாசார்யர்கள், அஸ்ய ப்ராமாண்யம் ப்ரதிஷித்யதே என்று முதல் இரண்டு ஸூத்ரங்களுக்கும் வாக்ய பூர்த்தியைச் செய்து, மூன்றாவது ஸூத்ரத்திலுள்ள 'ததப்ரதிஷேத:' என்பதை நாலாவது ஸூத்ரத்திற்கு அநுவ்ருத்தி செய்து கொள்ளுகிறார்கள். மூன்றாவது ஸூத்ரத்திலுள்ள 'தத்' என்பதால் 'உத்பத்யஸம்பவம்' பராமர்சிக்கப் படுகின்றது என்று ஸ்ரீசங்கராசார்யர்; 'பாஞ்சராத்ர ப்ராமாண்யம்' பராமர்சிக்கப்படுகின்றது என்று ஸ்ரீ வைஷ்ணவாசார்யர்கள்.

இவைகளின் குண தாரதம்யத்தைப் பராமர்சித்து பார்க்கும்பொழுது சில அம்சங்கள் கவனிக்கத்தக்கவையாகத் தோன்றுகின்றன. முதல் இரண்டு ஸூத்ரங்கள் ஸம்பந்தப்பட்ட வரையில் இரண்டு பாஷ்யங்களுக்கும் எவ்வித அர்த்த தாரதம்யமும் தென்படவில்லை. 'ஏஷா கல்பநா அஸங்கதா' என்று ஒருவரும் 'அஸ்ய ப்ராமாண்யம் ப்ரதிஷித்யதே' என்று மற்றொருவரும் சொல்லுகிறார்கள். இரண்டுக்கும் அவ்வளவாக அர்த்தபேதமில்லை. மூன்றாவது ஸூத்ரத்தில் 'ததப்ரதிஷேத:' என்று வாக்ய பூர்த்தி காணப்படுகிறபடியால் வாக்ய பூர்த்திக்காக வேறு பதங்கள் அநபேக்ஷிதங்களே. நாலாவது ஸூத்ரத்தில் ஹேது மாத்ரம் காணப்படுகின்றது; பூர்த்திக்கு வேறு பதங்கள் அபேக்ஷிதங்கள். மூன்றாவது ஸூத்ரத்தில் விச்சின்னமான 'ஏஷா கல்பநா அஸங்கதா' என்பதை ஸ்ரீசங்கராசார்யர் நாலாவது ஸூத்ரத்திற்கு அநுவ்ருத்தி செய்து கொண்டு வருகிறார்; ஸ்ரீ வைஷ்ணவாசார்யர்கள் மூன்றாவது ஸூத்ரத்திலுள்ள 'ததப்ரதிஷேத:'

என்பதை அநுவ்ருத்திசெய்து கொள்ளுகிறார்கள். இந்த அநுவ்ருத்திகளுள் எது ஸ்வரஸதர மென்பதைக் கவனிக்கவேண்டும்.

தவிரவும், "விஜ்ஞாநாதிபாவே வா" என்பதிலுள்ள 'வா' என்னும் சப்தத்திற்கு 'அபி' என்று அர்த்தம் சொல்வது கொஞ்சம் ச்ரம ஸாத்யமே. ஸூத்ரங்களில் 'வா' என்னும் சப்தம் வரும் ஸூத்ரங்களைப் பராமர்சித்துப் பார்த்தால், பக்ஷ விபரிவர்த்தநமாகிற அர்த்தமே பெரும்பாலும் தென்படுகின்றது; 'அபி' என்னும் அர்த்தம் அபூர்வமே.

தவிரவும். 'ததப்ரதிஷேத:' என்பதிலுள்ள 'தத்' என்னும் சப்தத்தின் பராமர்ச ஸம்பந்தமாகவும் சிந்திக்க வேண்டிய அம்சம் ஒன்று உண்டு. முதல்இரண்டு ஸூத்ரங்களிலும் 'ஏஷா கல்பநா அஸங்கதா' என்று சொல்லிவிட்டு, மூன்றாவது ஸூத்ரத்தில் 'தஸ்ய அப்ரதிஷேத:' என்று சொன்னால், இந்த 'தத்' என்னும் சப்தத்தால் 'கல்பநா' என்பதை க்ரஹிப்பது ஸ்வரஸமாக இருக்குமே தவிர, அதை த்யஜித்து அந்தவாக்யத்தின் உள்ளில் இருக்கும் 'உத்பத்த்யஸம்பவாத்' என்னும் ஹேதுவிலுள்ள உத்பத்ய ஸம்பவத்தை க்ரஹிப்பது ஸ்வரஸமன்று என்றே சொல்ல வேண்டும். சாப்திகமாகவும் ஆர்த்திகமாகவும் 'உத்பத்த்யஸம்பவ:' என்பது 'கல்பநா' என்பதைக் காட்டிலும் அதிகமாக நெருங்கி இருக்கவில்லை; ஆகையால் அப்ரக்ருதமேயாகும்.

தவிரவும், ஸ்ரீ சங்கராசார்யரின் பாஷ்யப்படி இந்த உத்பத்ய ஸம்பவம் பலவகைப் பட்டதாகக் காணப்படுகின்றது. முதல் ஸூத்ரத்தில் சொல்லப்பட் டிருக்கும் உத்பத்ய ஸம்பவம் ஜீவோத்பத்ய ஸம்பவத்தைக் குறிக்கின்றது. இரண்டாவது ஸூத்ரத்திற் சொல்லப்பட்டுள்ளது கர்த்தாவினிடமிருந்து கரணத்தினுடைய உத்பத்ய ஸம்பவத்தைக் குறிக்கின்றது. இவ்விடத்தில் இவைகளுள் எந்த உத்பத்ய ஸம்பவம் க்ரஹிக்கப்படுகின்றது என்பதை விசாரித்தால், இவை யொன்றும் க்ரஹிக்கப்பட வில்லையென்றும், வேறொரு உத்பத்ய ஸம்பவம் க்ரஹிக்கப்படுகின்றது என்றும் ஏற்படும். "அயமுத்பத்த்யஸம்பவோ தோஷ: ப்ரகாராந்தரேணேத்யபிப்ராய:" [இந்த உத்பத்ய ஸம்பவ ரூபமான தோஷம் வேறு ப்ரகாரத்தாலே ஏற்படுகின்றது என்பது ஸூத்ரக்காரருடைய அபிப்ராயம்] என்று ஸ்ரீ சங்கராசார்யரே எழுதிவிட்டு அது எவ்விதமான உத்பத்ய ஸம்பவம் என்பதைப் பின்வருமாறு உபபாதிக்கிறார். 'ஸங்கர்ஷணாதிகள் வெவ்வேறு புருஷர்களா? இல்லாவிட்டால் ஒரே புருஷனா?' என்று விகல்பித்து, வெவ்வேறானவர் என்னில் ஈச்வரர்கள் பலர் என்னும் தோஷம் ப்ரஸங்கிக்கு மென்றும், ஒருவரே என்னில் உத்பத்ய ஸம்பவதோஷம் நிற்கிறது என்றும் சொல்லுகிறார். பாஞ்சராத்ரிகள் பல ஈச்வரர்களை ஒத்துக்கொள்ள வில்லையாதலால், முதல்

பக்ஷத்தில் ப்ரஸங்கிக்கும் ஈச்வர பஹுத்வ ரூபமான அர்த்தத்திற்கு அவகாசம் இல்லை யென்பதும், இரண்டாவது பக்ஷத்தில் ப்ரஸங்கிக்கும் உத்பத்யஸம்பவ தோஷம் மாத்ரம் நிற்கின்றது என்பதும் அவருடைய அபிப்ராயம். 'நாலு வ்யூஹங்களும் ஒரே புருஷன் என்றால் அவர்க ளெல்லாரும் துல்யமான தர்மத்தை உடையவர்களாக இருக்கவேண்டும். ஒருவனிடமிருந்து மற்றொருவனுடைய உத்பத்தியோவென்றால், இருவர்க்கும் பரஸ்பரம் தர்மங்களில் ஒருவித வ்யத்யாஸத்துடனேயே ஸம்பவிக்கும். துல்ய தர்மாக்களாக இருக்கும் வ்யூஹங்களுக்கு ஒருவரிடமிருந்து மற்றொருவடைய உத்பத்தி ஸம்பவிக்கமாட்டாது; இதுதான் இவ்விடத்தில க்ரஹிக்கப்படும் உத்பத்ய ஸம்பவம்' என்று விவரிக்கப்பட்டிருக்கின்றது. இப்படி பல ப்ரகாரமாக உத்பத்ய ஸம்பவம் இருக்கும்பொழுது, 'தசு' என்னும் சப்தம் ஸாமாந்யமாக உத்பத்ய ஸம்பவத்தை க்ரஹிக்கின்றது என்றும், அது இவ்விடத்தில் ஒரு ப்ரகாரமாக மாத்ரம் எடுத்துக்கொள்ளப்படுகின்றது என்றும் சொல்வது ஸங்கதமாகுமா என்பது ஆலோசிக்கத்தகுந்தது.

தவிரவும், 'வாஸுதேவனிடத்திலிருந்து ஸங்கர்ஷணன் உத்பந்நனு கிறான்' என்பதற்குப் பாஞ்சராத்ரிகள் பகவானுடைய ஸ்வேச்சாவிர்பாவத்தை அர்த்தம் கொள்கிறார்களே தவிர, கீழ்ச் சொல்லப்பட்டுள்ள ப்ரஸித்த உத்பத்தியை அர்த்தம் கொள்ளவில்லை. அப்படி அர்த்தம் கொண்டாலன்றோ குணாதிசயத்தை ஒத்துக்கொள்ளாததால் உத்பத்தியின் அஸம்பவம் ப்ரஸங்கிக்கின்றது என்று சொல்லலாம்? ஒருவனே தன்னை நாலுவிதமாக வ்யூஹித்து நிற்கிறான் என்று சொல்வதே அஸம்பாவிதம் என்று சொல்வதற்கும் அவகாசமில்லை. ஏனென்றால் ச்ருதியில் 'ஸ ஏகதா பவதி த்ரிதா பவதி' என்கிறபடி பரமாத்மா தனது ஸங்கல்ப மாத்ரத்தாலே தன்னை பஹுவாகச் செய்து கொள்ளலாம்' என்று சொல்லப்பட்டிருக்கிறதன்றோ? ஸ்ரீசங்கராசார்யரே, இந்த ப்ரகரணத்திலேயே பின் வருமாறு பாஷித்திருக்கிறார்:— [நாராயணனே தனது ஸங்கல்பத்தால் தன்னை பஹுவாக வ்யூஹித்துக் கொண்டு நிற்கிறான் என்று பாஞ்சராத்ரிகளாற் சொல்லப்படும் வார்த்தையைப் பகவான் பாதராயணர் தோஷ துஷ்டமென்று நிராகரிக்க ப்ரவ்ருத்திக்கவில்லை; அது ச்ருதிக்கு விருத்தமன்றாகையால்]. இவ்விதம் வ்யூஹாவதாரத்தை நிராகரண நர்ஹமென்று ஒத்துக்கொண்டபிறகு, அந்த வ்யூஹாவதாரம் உத்பத்தியின் அஸம்பவமாகிற தோஷத்திற்கு இடம் கொடுக்கின்றது என்று சொல்வது ஸங்கதமாகுமா?

இன்னும் ஒரு விஷயம் கவனிக்கவேண்டியதாக இருக்கின்றது. 'விஜ்ஞாநாதிபாவே வா ததப்ரதிஷேத:' என்னும் மூன்றாவது ஸூத்ரத்

தில், 'ஸங்கர்ஷணன் முதலானவர்களுக்குப் பரமாத்ம பாவம் ஒத்துக்கொண்ட போதிலும்' என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இரண்டு பாஷ்யக்காரர்களுடைய அர்த்தமும் அதுவே. இதிலிருந்து, 'பாஞ்சராத்ரத்திற் சொல்லப்பட்டுள்ள ஸங்கர்ஷணன் முதலான மூன்று வ்யூஹங்களும் ஈச்வரர்களேயன்றி ப்ரஸித்த ஜீவன் முதலியவரல்லர்' என்னும் விவரணம் ஸூத்ரக்காரர் காலத்திலேயே வழங்கி வந்ததாக ஏற்படுகின்றது. உண்மையாகவே ஸ்ரீ பாஞ்சராத்ரிகள் கொள்கையும் அதுவே. அதை அறிந்திருக்கும் ஸூத்ரக்காரர், 'ஸாக்ஷாத் ஜீவனுடைய உத்பத்தியைப் பாஞ்சராத்ரம் சொல்லுகிறபடியால் அது அப்ராமாணம்' என்னும் முதல் ஸூத்ர வாதத்தை ஸித்தாந்தமாகச் செய்ய ப்ரவ்ருத்திப்பாரா என்பதைச் சற்று ஆலோசிக்கவேண்டும். ஒரு மதத்தைக் கண்டிப்பதாக ப்ரவ்ருத்தித்தால், அந்த மதம் போதிக்கும் கொள்கைகளில் காணப்படும் தோஷத்தை விவரித்து அதைக் கண்டிப்பது ந்யாய்யமாகுமே தவிர, அந்த மதம் போதிக்காத விஷயங்களை ஆரோபணம் செய்துகொண்டு அதைக் கண்டிப்பது ஒருபொழுதும் ந்யாய்யமாகாது. அதிலும் அதிமாத்ரம் ருஜுவான ஸூத்ரக்காரர் அம்மார்க்கத்தில் ப்ரவ்ருத்திக்கமாட்டார் என்பது நிச்சயம். ஆகையால், ஸூத்ரக்காரர் இந்த ஸூத்ரத்தை ஸித்தாந்த ஸூத்ரமாகச் செய்திருக்கமாட்டார் என்றே சொல்லவேண்டும்.

இந்தக் காரணத்தினாலேயே இரண்டாவது ஸூத்ரத்தையும் ஸூத்ரக்காரர் ஸித்தாந்த ஸூத்ரமாகச் செய்திருக்கமாட்டார் என்றே தோன்றுகிறது. ஜீவன் மநஸ் என்பவைகளை ப்ரஸித்த ஜீவன் மநஸ் என்று க்ரஹித்தாலன்றோ 'ந ச கர்து: கரணம்' என்னும் வாதத்திற்கு இடம் உண்டாகும்? பாஞ்சராத்ரிகள் அப்படி அர்த்தம் கொள்ளவில்லை என்பதை ஸூத்ரக்காரர் அறிந்தவரே.

இந்தக் காரணங்களெல்லாவற்றையும் பார்த்தால், முதல் இரண்டு ஸூத்ரங்களையும் ஸித்தாந்த ஸூத்ரங்களாக ஸ்ரீ சங்கராசார்யர் செய்யும் அர்த்தத்தை ஸூத்ரக்காரருடைய ஹ்ருதயம் என்று நிச்சங்கமாகச் சொல்வது ஸாத்யமில்லையென்றே தோன்றுகிறது.

நாலாவது ஸூத்ரத்தில் குண குணித்வ கல்பநா ரூபமான விப்ரதிஷேதமும் வேத நிந்தா ரூபமான விப்ரதிஷேதமும் ப்ரஸ்தாவிக்கப் படுகின்றது என்பது ஸ்ரீ சங்கராசார்யருடைய பாஷ்யம். பகவானை ஜ்ஞாந ஸ்வரூபனென்றும் ஜ்ஞாந குணகனென்றும் சொல்வது ஒரு விப்ரதிஷேதமாகுமோ? தேஜஸ்ஸுக்கு த்ரவ்யத்தன்மை இருக்கையிலும், ஆச்ரயாச்ரயிபாவத்தின் நையத்யத்தால் ப்ரபா ப்ரபாவத்ரூபேண குண குணி பாவம் ஸங்கதமாவது போல, ஜ்ஞாநத்திற்கு த்ரவ்யத்தன்மை இருக்கையிலும்

தர்ம பூத ஜ்ஞாநத்திற்கும் ஸ்வரூப பூத ஜ்ஞாநத்திற்கும் நியதமான ஆச்ர யாச்ரயி பாவம் இருக்கிறபடியால் குணகுணி பாவம் உபபந்நமாகாதோ? பகவான் பாதராயணர் இதை அநுபபந்நமென்று நினைத்தார் என்று சொல் வதும் அந்த அநுபபத்தியை விப்ரதிஷேத ரூபமான தோஷமென்று சொல்லி அந்தக் காரணத்தால் பாஞ்ராத்ர மதத்தை நிரஸநம் செய்கிறார் என்று சொல்வதும் ந்யாயத்திற்கு ஒத்ததல்ல.

வேதத்தைப் பாஞ்சராத்ரம் நிந்திக்கின்றது என்று சொல்வதும் அஸங்கத மென்பதை நமது ஆசார்யர்கள் பஹு ப்ரகாரமாக நிர்வஹித் திருக்கிறார்கள். "அதஃஷு வேதேஷு வுருஷாயுத் ஶ்ரேயாஸம் ஶாண்டில்ய இதம் ஶாஸ்த்ரம் அதீதவாந்" [சாண்டில்யர் என்பவர் நாலு வேதங் களிலும் புருஷார்த்தத்தைப் பெறாமல் இந்தச் சாஸ்த்ரத்தை அத்யயநம் செய்தார்] என்று பாஞ்சராத்ரம் சொல்லுகின்றது என்பது உண்மையே. ஆனால் பகவாந் பாதராயணருக்கு இம்மாதிரி நிந்தையின் கருத்து இன்னது என்பது அஜ்ஞாதமா யிருக்குமோ? ஐதரேய ப்ராஹ்மணத்தில் "ப்ராதஃ ப்ராதரந்ருதம் தே வதந்தி" என்று சொல்லப்படும் அநுதித ஹோம நிந்தை உதிதஹோம ப்ரசம்ஸையை ஸூசிப்பிக்கும் பொருட்டே என்பதை அவர் அங்கீகரித் திருக்கிறாரன்றோ? "ந ஹி நிந்தா நிந்த்யம் நிந்திதும் ப்ரவர்த்ததே, அபி து நிந்திதாதிதரத் ப்ரஶம்ஸிதும்" [ஒரு பொருள் நிந்திக்கப்பட்டால் ப்ராயேண அந்த நிந்தை நிந்திக் கப்படும் பொருளை நிந்திப்பதைக் கருத்தாக உடையதன்று, மற்றொரு பொருளை ஸ்தோத்ரம் செய்வதையே கருத்தாக உடையது] என் னும் ந்யாயம் ஸூத்ரக்காரருக்குத் தெரியாதா? தவிரவும் ப்ரக் ருத வாக்யத்தின் வசநவ்யக்தியைச் சற்று கவனிப்போம். 'அதஃஷு வே தேஷு வுருஷாயுத் ஶ்ரேயாஸம்' [நாலு வேதங்களிலும் புருஷார்த்தத்தை அடையாமல்] என்று மாத்ரம் அவ்விடத்தில் இருக்கின்றது. இதற்கு வேதங் களில் புருஷார்த்தம் இல்லையென்று மாத்ரம் அர்த்தம் கிடைக்குமோ? 'வேதங் களில் புருஷார்த்தம் சொல்லப்பட்டிருக்கின்றது; ஆனால் அதைச் சாண்டில்யர் தமது சக்திக் குறைவினால் பெறவில்லை' என்று அர்த்தம் கிடைக்காதோ? "அதஃஷு வேதேஷு உத்ருஷ்ய நாபயேத்: வேதேஷு வுருஷா யேதா நாஸ்தி; கிந்து யதேஷு வுருஷாயுத் ஶ்ரேயாஸம் இதி" என்பது ஸ்ரீயாமுநாசார்யருடைய வ்யாக்யாநம். 'வேதங்கள் பெரியதொரு ஸமுத்ரம் போன்றது. பல விஷயங்களை அவை உபபாதிக்கின்றன. அவைக ளுள் பரம புருஷார்த்தத்தின் உபபாதநம் ரத்நாகரமாகிற ஸமுத்ரத்தில் ரத் நங்கள் அந்தர்ஹிதங்களாய்க் கிடப்பது போல துர்லபமாய்க் கிடக்கின் றது. அதைத் தெளிவாகப் பாஞ்சராத்ரம் எடுத்து மந்த மதிகளாக இருக் கும் நமக்கு ஸுலபமாகப் போதிக்கின்றது' என்பதுதான் ஸ்ரீ பாஞ்சராத்ரி களின் கொள்கை. இது இப்படி யிருக்கையில் பாஞ்சராத்ரம் வேதத்தை நிந்திக்கின்றது என்று சொல்வது எவ்விதம் ஸங்கதமாகும்?

இவை யெல்லாவற்றையும் பராமர்சித்துப் பார்க்குமளவில், ஸூத்ரக் காரர் பாஞ்சராத்ரத்தைக் கண்டிக்க ப்ரவ்ருத்திக்க வில்லையென்றே நமக்குத் தோன்றுகின்றது.

ஸ்ரீ:

# கம்பர் ஸ்ரீவைஷ்ணவ சமயத்திற்குச் செய்தருளிய பேருதவிகள்.

(திரு. அ. இராமகிருஷ்ண சடகோபதாஸர்.)

முழுமுதற் கடவுளை 'விஷ்ணு' என்ற பெயரால் வழிபட்டு வணங்கும் கொள்கைக்கு 'வைஷ்ணவம்' என்பர். விஷ்ணுவைப் 'பகவான்' என்று வைதிக சாஸ்திரங்கள் கூறுகின்றபடியால், வைஷ்ணவர் எல்லாம் 'பாகவதர்' எனப்படுவர். பாகவதர்களது படித்தரத்திற்கு ஏற்ப இறைவன் அருள் விளங்கி நிற்கும். அதாவது, பாகவதர்களுக்குக் கடவுளிடத்தில் எவ்வளவு வரைக்கும் உண்மையான பக்தியும் அன்பும் அமையுமோ, அவ்வளவு வரைக்கும் அவருடைய கிருபாகடாக்ஷமும் அவர்களுக்கு அமைந்து விளங்கும் என்பதாம். கடவுள் அருள் எங்கெல்லாம் தோன்றி நிற்கின்றதோ அங்கெல்லாம் அன்பும் இரக்கமும், பருந்தும் நிழலும்போல் பிணைந்து நிற்கும். இறைவனுடைய திருவருளைப் பெற்று, அன்பும் இரக்கமும் கொண்ட பாகவதருட் சிறந்தோர் ஆசாரியர்களாய்த் தோன்றி, நம்மனோர்க்கெல்லாம் உண்மையான விஷயங்களை எடுத்துக்கூறி, சமய ஒழுக்கத்தில் நாம் நின்று, கடவுளை அறிந்துய்யும் வழிகளை நமக்கு அறிவுறுத்துவர். இந்த வைதிக சமய வழியில் நிற்கும் இப் பெரியோர்கள், பரமனைப் போற்றி, அவனிடம் தமக்கு அமைந்துள்ள அன்பாலும், ஜீவர்கள்பால் வைத்திருக்கும் கருணையாலும், அவனுடைய திருவருளை அடைந்த சக்தியாலுமே, நமக்கும் பின்னுள்ளோர்க்கும் பிரயோஜனப்படுமாறு அந்த விஷயங்களை எல்லாம் நூல்களில் எழுதிவைப்பர். இப்படித் தம்முடைய கொள்கையிற் சார்ந்தோர்க்கு எல்லாம், அன்னோர் பேருதவியாளராய் அமைவர். இவர்கள் இவ்வாறு செய்வதனால்தான் வைஷ்ணவ சமயம் பூலோகத்தில் நிலைத்து நிற்கின்றது.

வைஷ்ணவ சமயமோ மிகவும் பழமையானது. இது பழையகாலத்தில் இருந்தே பெரிய பாகவதர்களாலும் ஆசாரியர்களாலும் இந்தத் தேசத்தில் பலமான அஸ்திவாரத்தோடு நாட்டப்பட்டு எக்காலத்தும் அழிவுறாதபடி பாதுகாக்கப்பட்டு வருகின்றது. ஒருவர் செய்யும் தருமங்களில், ஆத்மாக்களுக்குச் செய்யும் சமய போதனையே சிறந்த தருமம் என்று பெரியோர்கள் கூறுகின்றனர். இதுவே எம்முடைய அபிப்பிராயமும் ஆகும். ஏனென்றால், சமய அறிவு—அதனினும் தலைமையான சமய அறிவு—இம்மைக்கும் மறுமைக்கும் வேண்டும் நலம் பல அளிப்பதாலும், ஒருவன் தன்னுடைய

நலத்தையே பாராட்டாது பிறருடைய நலத்தையும் உடன்பாராட்ட ஏதுவாய் இருப்பதாலும், எல்லா ஒழுக்கங்களுக்கும் அடிப்படையாய் இருப்பதாலும், முடிவில் வீட்டுநெறியை (மோக்ஷ சாம்ராஜ்யத்தை) உணர்த்தி உய்விக்கச் செய்தலாலும், அது சிறந்தது என்று கூறப்படுகின்றது. சமயம் பல வகை இடையூறுகளினால் நிலை குலையும்போது, அதனைத் தக்க வழியில் நிலை நாட்டி உலகத்தோரை உய்வித்தல் அருள் அறங்கள் எல்லாவற்றினுஞ் சிறந்ததாகும். ஆகவே, சமயங்கள் எல்லாவற்றினுஞ் சிறந்த "ஸ்ரீ வைஷ்ணவ சமயம்" மிகப்பழமையது ஒன்றாதலின், அப்போதைக்கப்போது காலக் கொடுமையால், அதற்கு இடையூறும் வழிகள் உண்டாகும்போதெல்லாம் அறிவுணர்ச்சியும் கருணையும் கைவரப்பெற்ற மூதறிஞர், அச்சமயவுண்மைகளை ஆன்மாக்களுக்கு அவ்வப்போது எடுத்துக்காட்டி, அவர் மயங்கா வண்ணம், பிரசித்தமான நூல் பல எழுதி அதனை நிலைப்படுத்துவர். இப்படிச் செய்கிறவர்களே, உண்மையில் கைம்மாறு கருதாத கருணை நிரம்பிய பெரியோர் ஆவர். இவர்கள் பால் நாம் எழுமையும் உழுவலன்பொடு கடமைப்பட்டுளோம். இப்பேர்ப்பட்ட புண்ணியவான்களில் மஹா கவியாகிய கம்பரும் ஒருவர் ஆவர்.

தமிழ் நாட்டிலே சுமார் ஆயிரம் வருஷங்களுக்குமுன் கவிச்சக்ரவர்த்தியாக விளங்கிய கம்பர் தம்முடைய காலத்திலே, தாம் கொண்ட சமயக் கருத்து உலகோர்க்கெல்லாம் படுமாறும், அவர்கள் அச்சமய வழியிலே நின்று ஒழுக்கமுற்று அருள் அன்பு இரக்கம் முதலிய பெற்றுப் பலவழிகளிலும் எல்லா ஜீவராசிகளுக்கும் நன்மையைச் செய்யுமாறும், பெரிய தொரு தருமத்தை 'இராமாவதாரம்' என்று அவர் தாமே பெயரிட்ட 'இராமாயணம்' என்னும் அரும் பெருங் காவியங்கொண்டு அவர் செய்திருக்கின்றார். நமது வைஷ்ணவ சமயம் அழியாவகையான அஸ்திவாரங்களைப் போட்டு ஸ்ரீராமனது கல்யாண குணங்களாகிய சிறந்த கட்டிடத்தை அவர் கட்டி, நாம் களிப்படையவும் நமது உணர்வு உருகி கண்ணீர் தாரைதாரையாக வரவும், அவர் உயர்வாகவும் முழுமுதற் பொருளாகவும் எண்ணிய ஸ்ரீராமனே பரப்ரஹ்மம் என்பதை நாம் அறியவும் இந்நூல் மூலம் அவர் செய்கின்றார். இன்னோரன்ன வகையாய் மனிதர் மன வியக்கமுழுமையும் நன்கு கண்டு அநுபவித்த அம்மஹா கவி நமது புறத்தே விரிந்து அறிவை, சலிப்படையாவாறு இன்பத்தில் ஆழ்த்திப் பிறகு கொஞ்சங் கொஞ்சமாகச் சுருக்கி இழுத்துக் கொண்டே வந்து, அகத்தே புகச் செய்து, ஒரே அன்புமயமாய் ஆக்கி, முடிவில் இறைவனோடு இயைபுபடுகின்ற வழிமுறைகளைத் தெளிவாகத் தமது நூலின் இடையிடையே சொல்லிக் கொண்டுபோய்த் தமது கருத்தை நாட்டினமையை நாம் உணரும்படி செய்கின்றார். இப்படியாக அவர் மிக எளிமையில் யாவரும் உணரும் வண்ணம்,

ஸ்ரீ வைஷ்ணவ சமயத்திற்கும், அச்சமயத்தைப் பின்பற்றிய சமூஹத்திற்கும், அவர் செய்திருக்கும் வேலைத்திறம் சொல்லி முடியாது. அவ்வேலைத்திறம், கனிந்து பரிபக்வமான பக்தியினால் ஆயது. பக்திச் சுவையே மற்றெல்லாச் சுவைகளினும் மேம்பட்டது. அது சுவையெல்லாவற்றையும் சுவைப்படுத்துந் தன்மையது. அப்பேர்ப்பட்ட பக்தி யொன்றினைக் கொண்டே அன்பு கெழுமிய பாடல்களைக் கருங்கல்லும் கரைந்து உருகுமாறு இராமாயணத்தின் இடையிடையே பாடிச்சென்று, நமக்கெல்லாம் இன்பம் ஊட்டித் தமது சமயக் கருத்தையும் வைஷ்ணவாபிமானத்தையும் வெளியிடுகின்றார்.

மாப்பெரும் புலவராகிய இவர் தம் நாளிலே 'கால நிலைமை' எவ்வாறிருந்தது? அக்காலத்தில் 'சமயவுணர்ச்சி' மக்களுக்கிடையில் எவ்வாறு பரவியிருந்தது? கம்பர் எக்குலத்தோர்? அவர் இராமயாணம் பாடியது எதற்காக? அவர் சைவரா? அல்லது வைஷ்ணவரா? அல்லது பொது நோக்குடையவரா? விசிஷ்டாத்வைத த்வைத அத்வைத தத்துவக் கொள்கைகளில் எதில் அவர் ஈடுபட்டவர்? விசிஷ்டாத்வைத வைஷ்ணவமே அவரது சமயமாயின் அவர் அதனைத் தம் நூலிடையே எவ்வாறு நிலைநிறுத்தியுள்ளார்? என்னுமாதிய இக்கேள்விகளை ஆராய்ந்து, கம்பர் உள்ளபடியே விசிஷ்டாத்வைத சுத்த வைஷ்ணவர் என்பதை நிர்ணயிப்போம்.

இனிக் கம்பர் எத்தனை யாண்டுகட்கு முன்பிருந்தார் என்பதை யாராய்ந்தால், அவர் சுமார் ஆயிரம் வருடங்கட்கு முன்பு வாழ்ந்தவர் என்று ஆராய்ச்சி முறையால் தெரியவருகின்றது. அவர் காலத்தைப்பற்றி எமது ஆத்ம நண்பர் காலஞ்சென்ற பிரம்ம ஸ்ரீ வ. வே. சுப்பிரமணிய அய்யர் என்பார் தமது பாலகாண்டச் சுருக்கப் பதிப்பின் முகவுரையில் கூறி யிருப்பதை யாம் ஒப்புக்கொள்ளுகிறோம். 'கம்பநாடர்' பத்திரிகாசிரியரான ஸ்ரீமத் உ. வே. கோவிந்தராஜையங்கார் ஸ்வாமிகள் செய்திருக்கும் கால நிர்ணயத்தையும் ஒருவாறு ஒப்புக்கொள்ளலாம். ஸ்ரீமான் செல்வக் கேசவராய முதலியாரை உள்ளிட்ட சில பலர் கர்ண பரம்பரைக் கதைகளைக்கொண்டும் தமக்குக் கிடைத்த சில நூல்களின் ஆராய்ச்சியைக்கொண்டும், சாஸன ஏதுக்களைக் கொண்டும் பலவிதமாகக் கூறுகின்றனர். 'Tamil Studies' எழுதிய திருவாளர் எம். கிருஷ்ணசாமி ஐயங்கார் கூறுவது உண்மைக்குப் பொருத்தமாயில்லை. இவர் செய்திருக்கும் ஆழ்வார்கள் காலநிர்ணயங்களும் சுத்தப் பிசகாய்த் தென்படுகின்றன. யார் எப்படிக் கூறியபோதிலும் கம்பர் ஆயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்தார் என்னும் பிரமாணங்களே முரண்படாது பலமாய்த் தோன்றுகின்றன. அவற்றை ஈண்டு விரித்தெழுத எமக்கு நோக்கமில்லை யாதலால், தென் இந்தியா அதாவது தமிழ்நாடு சுமார் ஆயிரம் ஆண்டு

களுக்கு முன்னர், கல்வித்துறை சமயவுணர்ச்சி என்பவைகள் சம்பந்தப்பட்ட வரையில் எப்படி யிருந்தது என்பதை மட்டில் நாம் சுருக்கமாகச் சற்று விசாரிப்பாம்.

கி. பி. 8,9,10,11,12-ம் நூற்றாண்டுகளிலே தென்னாடு முழுதும் வடமொழிப்பயிற்சி மிக்கப்பரவியிருந்தது. இந்தக்காலத்து மத்தியிலேதான் கம்பர் இருந்தாராகற்பாலர். ஆரியவேதம், உபநிஷதங்கள், புராணங்கள், இதிகாசங்கள், முதலியவை எல்லாம் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன. கி. பி. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து ஏழாம் நூற்றாண்டுவரையும் நானாவித கஷ்டங்களாலும், தகுந்த தமிழ் நாட்டரசர் இல்லாக்குறைவாலும், ஒருவாறு அடங்கித் தம்பித்திருந்த தமிழர் அறிவெல்லாம் பிரகாசப்பட்டது இக்காலத்தேதான். ஆரியமத தத்துவங்கள் முழுமையும் தமிழ்ப் புலவர்களால் அங்கீகரிக்கப்பட்டு நுண்ணிய ஆராய்ச்சிக்கெல்லாம் இடந்தந்தது இக்காலந்தான். கி. மு. முதல் நூற்றாண்டிலும், கி. பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளிலும், ஆர்யவேத தத்துவங்களை, முதலாழ்வார்கள், சடகோபர் முதலானோர் தோன்றித் தமது பிரபந்தங்களில் தெளிவுறக் காட்டிய உண்மைகளை, திருமழிசை குலசேகர ஆழ்வார்கள் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் மத்தியிலே எடுத்துக்காட்டியருளினார்கள். பெரியாழ்வார் திருமங்கையாழ்வார்கள் மேற்சொன்ன நூற்றாண்டுகளின் துவக்கத்திலே அவதரித்து, இந்த விஷயங்களையெல்லாம் திருத்தமுற வெளிப்படுத்தவே, தமிழ்நாட்டோர் மிக்கதோர் உணர்ச்சி பெற்று, அவர்களிடத்தில் ஆர்வமுற்று அவ்வடியார்கள் அருளிய உயர்ந்த கருத்துக்களை ஆராய முற்பட்டனர். இதே காலத்தில், சைவ, புத்த சமண சமயினர் தங்கள் தங்கள் கருத்துக்களையும் வெளியிடத் தொடங்கினர். இந்தச் சந்தர்ப்பத்தில்தான் சமயவுணர்ச்சி மக்களுடைய மனத்தில் பெரிதும் நிரம்பிற்று. நிரம்பவே, அவர்கள் அவ்வுணர்ச்சியில் மிகவும் ஆழ்ந்தவராய்த் தந்தம் சமயக்கருத்துக்களை யாவரும் உணரும்படி நூல்கள் பல செய்தனர். ஸ்ரீபுராணம், சிந்தாமணி முதலிய நூல்களைச் சமணமதத்தினர் எழுதினர். புத்த தர்மஸங்கஸ்தாபனங்களைச் செய்ய வாரம்பித்தனர் புத்தர்கள்*. ஞானசம்பந்தர் முதலிய சைவப் பெரியோர்கள் தம்முடைய கடவுள்மீது 'தேவாரம்' என்னும் இனிய பாடல்கள் பல பாடினர். இவர்களோடு அநேக தடவைகளில் வாதாடியும் அலைந்தும் துன்பமெல்லாம் பட்டும் திருமங்கையாழ்வார் இழந்துபோன தமது மதத்தை நாட்டித் திருவருளுட் கலந்தனர்.

இப்படி நடைபெறுஞ் சமயத்தில், அதாவது கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் ஸ்ரீசங்கராசாரியஸ்வாமிகள் தோன்றித்தமது அத்

---

* இந்தக்காலத்தில்தான் புத்தமதம், 'மஹர்யான பௌத்தம்' என்றும் 'ஹீனயான பௌத்தம்' என்றும் பிரிவுபட்டது.

வைதக்கொள்கையைப் பரப்பினர். அவரை பொட்டிக்கிளம்பிய சில புலவோர், பல வடமொழி நூல்களுக்கு வியாக்கியானங்களையுஞ் செய்தனர். சங்கரவுரையில் நன்றாகப்பயின்ற நச்சினார்க்கினியர் என்னும் தமிழ் உரையாசிரியர், தொல்காப்பியம் பத்துப்பாட்டு, கலித்தொகை முதலிய நூல்களுக்கு உரைவகுத்தனர். இங்ஙனம் வடமொழி உரைநடையும் தமிழ் மொழியிற் கலந்தது. அதனால் தமிழர் புத்துணர்வு பெற்றனர். சங்கரஸ்வாமிகள் சமாதி அடைந்த சில வருஷங்களுக்குப் பின்னர், அதாவது கி. பி 9-ம் நூற்றாண்டின் இறுதியில், வைஷ்ணவ முதலாசிரியரான ஸ்ரீமந் நாதமுனிகள், எம் மூர்க்கண் ‡ அவதரித்து இழந்துபோன வைஷ்ணவ சமயத்தை மீண்டும் தென்னாட்டில் பரப்பி, சம்பிரதாய வழக்கவொழுக்கங்களுக்குப் பலமான ஏற்பாடுகளைச் செய்தனர்.

இங்ஙனமெல்லாம் வடமொழி நூல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்படவே, தமிழர்கள் முன்னிலும் பன்மடங்கதிகமாக அறிவாற்றலை அடைந்து மொழிவளர்ச்சி, சமயவளர்ச்சி, நாகரிக வளர்ச்சி, உணர்வுப்பெருக்கு, பாஜீவ தத்துவ உணர்ச்சி, ஆகிய இவைகளில் வல்லுநராய் விளங்கினர். இப்படி கி. பி. எட்டாம் நூற்றாண்டிலிருந்து நானூறு ஆண்டுகள் வரைக்கும் மேற்கூறிய விஷயங்கள் சம்பந்தமாக அநேகசீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. படவே, எல்லாவற்றிற்கும் அடிப்படையானதும், உயர்வுக்குக் காரணமுமான சமயவுணர்ச்சி ஒவ்வொரு மக்களின் இருதயத்திலும் விரிந்தது. விரியவே அது காரணமாக, சமய நூல்கள் பல இயற்றப்பட்டன.

அத்தகைய நூல்கள் தமிழ் நாட்டில் மிக விரைவாகப் பரவத் தொடங்கவே, ஒவ்வொரு மதத்தினரும், தாம் கொண்ட கருத்துக்களை, கதை வடிவமாய் அமைந்த நூல்களைக்கொண்டு, மக்களுக்கு இன்பம் ஊட்டிச் சமயவுணர்ச்சியைப் பெருக்க உத்தேசித்தனர். அவ்வுத்தேசத்தின்படியே, தமிழ்நாட்டுப் புலவர்க்கு வடமொழியில் உள்ள புராணேதிஹாசங்கள் தக்கவை யெனத் தென்பட்டன. படவே அவற்றைத் தமிழிலே மொழிபெயர்க்கலாயினர். கி. பி. 9ம் நூற்றாண்டின் மத்தியிலே, அதாவது ஸ்ரீமந்நாதமுனிகள் காலத்துக்குச் சிறிது முன்பே, கச்சியப்ப சிவாசாரியர் என்பார் ‘கந்த புராணம்’ என்னும் நூலை முதன் முதலிற் செய்தனர். இவர்க்கு முன்பே இருந்த தொல்காப்பிய முதல் உரையாசிரியரான இளம்பூரணர், திருக்குறள் உரையாசிரியரான பரிமேலழகர் முதலிய வைணவப் பெரியோர்கள், சமயத்தின் பொருட்டுப் பாடுபட்டிலர். ஏன் என்றால், அவர்கள் காலங்களிலே சமயம் பேதப்பட்டவகையாய்த் தோன்றவில்லை; சமய சச்சரவும் இல்லை. அன்னோர் தாம் கருதியதையே தமக்கு அணிகலனாகக்

‡ காட்டுமன்னார் கோயிலெனவழங்கும் வீரநாராயணபுரம்.

கொண்டு காலங்கழித்தனர். பிறர், தம்மை விரும்பினாலும் வெறுத்தாலும் அவ்விருப்பு வெறுப்புக்களை மதித்தனர் இல்லை. இப்படியே ஒவ்வொருவரும் அவரவர் கருத்தில் மட்டில் ஈடுபட்டுத் துவேஷம் பாராட்டாமல் இருந்தால் அவர்களுக்கிடையில் சமயசம்பந்தமான சச்சரவாவது அல்லது பேதமாவது எங்கிருந்து உண்டாகும்? ஆனால், சங்கரசுவாமிகள் காலத்திற்குப் பிறகு, அவரது போக்கைத் தழுவியவர், பேதமான சிலவிஷயங்களை உண்டாக்கவே, ஒருவிதமான பேதவுணர்ச்சி எங்கும் பரவியது. பரவவே, ஒவ்வொருவர் மனதிலும் பேதம் தோன்ற, அப்பேத காரணமாகப் பின்னுள்ளோர், சமய நூல்களைத் தத்தம் கருத்துக்கிசையச் செய்தனர். அதிலும், வெறும் தத்துவங்களை மாத்திரம் உரைத்தால் மக்களுக்கு வெறுப்புத்தட்டும் என்றே, தத்துவ விஷயங்களைக் கதாரூபமாகப் போதிக்கத் தொடங்கினர். மக்கள் மனநிலை, இந்தக்காலத்தில், இப்படிச் செல்கின்றது என்பதை நன்கு உணர்ந்ததனாலன்றோ, கம்பர், தமக்கு முன்பிருந்த வைஷ்ணவப் பெரியோர்கள் அருளிச்செய்த விஷயங்களைத் திரட்டிக் கதாரூபமான இராமாயணம் என்னுங் காவியத்தைச் செய்து முடித்திட்டார்.

கம்பர், இவ்வாறு மக்கள் மனோ பாவங்களைக்கண்டு, அவர்களை இலகுவில் இழுக்கும் வழியைத் தேடினர். தென்னாட்டு மக்களுக்குக் கதை கேட்பதில் மிக்க ப்ரீதியாக இருந்தது. இதுதான் தக்கவழி என்றுணர்ந்த கம்பர், இதிகாச சிரேஷ்டமான இராமாயணத்தைத் தமிழில் மொழி பெயர்க்கத் தொடங்கி, அது வழியாக அவர்களை வசியப் படுத்தினர். படுத்தி, அவர்கள் மனம் முழுமையும் தான் இழுத்து 'ஸ்ரீராமனே பரந்தாமன் அவனே பரப்பிர்மமம் அவனே மும்மூர்த்தி அவனே ஸ்ரீயப்பதியாகிய அம்மை அப்பன் அவனே நாராயணன் அவனே எல்லையில்லாத் தொல்பேர் இறைவன்' என்றுணரச் செய்து, அவனது திவ்ய கல்யாண குணங்களை எல்லாம் மனமார வாரிப் பருகவும், ஸ்ரீ ராம தாரக மந்திரத்தைச் செபித்துக்கொண்டு காலம் போக்கவும், காட்டுகின்றார். இப்படியாகத் தம்முடைய கொள்கையிலே உலகத்தோரை நிறுவும் பொருட்டு, அவர்களுடைய மனவழியே சென்று, முதநூல் ஆசிரியரைவிட மிக எளிதில் மக்களை வசியப்படுத்தும் இன்பத் துறைகளை அகமாகவும் புறமாகவும் ஆங்காங்கு அமைத்து, அதன் வழியாக அவர்கள் சலிப்படையா வண்ணம் அவர்களுடைய புற அறிவை எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக மடக்கி இழுத்துக்கொண்டுவந்து மெதுவாக அக வுணர்வில் புகுத்திப் பக்தியை அமிதமாக எழுப்புகின்றார்.

(தொடரும்)

110

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் வார்ஷிகமஹாஸங்கம்.

1

சென்னைபுரியில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையைச் சார்ந்த வார்ஷிக மஹாஸங்கமானது இவ்வருஷத்தில் ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபகாசார்ய பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யராக எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ அஹோபிலமடம் அழகிய சிங்கருடைய நியமனத்தை முன்னிட்டு நூற்றெட்டு திருப்பதிகளில் ஒன்ருகப் பெயர்பெற்ற ஸ்ரீ புள்ளம் பூதங்குடியில் கோயில் கொண்டிருக்கிற ஸ்ரீவல்வில்லி ராமன் திருவடிவாரத்தில் நாளது மேம்௴ 12, 13, 14 உகளில் (சென்ற சித்திரை௴ 30-31-ம் தேதிகளிலும் வைகாசி௴ முதல் தேதியிலுமாக) மூன்று தினங்கள் நடந்தேறியது. இந்த மஹா சபைக்குக் கோயம்புத்தூர் சேலம் நாமக்கல் ஸ்ரீரங்கம் திருச்சினுப்பள்ளி மன்னார்குடி கும்பகோணம் மதுரை தஞ்சாவூர் சென்னைமாநகர் முதலிய இடங்களிலிருந்து அநேக ஸ்வாமிகள் எழுந்தருளி இருந்தார்கள். ஸ்ரீ உவெ. எ. வி. கோபாலா சாரியார், டி. கோதண்டராமய்யங்கார், என். ஸ்ரீநிவாஸாசாரியார், வித்வான் கிடாம்பி ராமாநுஜா சார்யர், (மோஹனூர்) கே. வி வெங்கடாசார்யர் (நாமக்கல்) கெ. வி. குப்புஸாமி அய்யங்கார் (நாமக்கல்) நரஸிம்ம அய்யங்கா (நாமக்கல்) என். ஆர். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் (மதுரை] விஜயராகவாச்சாரியர் (பாதூர்] திருக்குடந்தை வாஸிகளான ஸ்ரீ உ. வே. ஸி. வி. ஜகந்நாதாசார்யர் ஆர். சௌந்தரராஜய்யங்கார் வி. ஆர். சடகோபய்யங்கார், கெ. ஆராமுதய்யங்கார், கெ. டி. சேஷாத்ரி அய்யங்கார், ஆர். ஸ்ரீநிவாஸ அய்யங்கார், கே. எஸ். ஸ்ரீநிவாஸ அய்யங்கார், ஸி. ஆர். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் முதலிய பல லௌகிக ப்ரமுகர்கள் வந்திருந்தனர். இந்த ஸபையை உத்தேசித்துவந்த ஸ்வாமிகளுக்கும் லௌகிக ப்ரபுக்களுக்கும் கமனுகமனங்களுக்கு தக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஸ்வாமிமலை கும்பகோணம் இந்த இரண்டு ஸ்டேஷன்களிலும் மோட்டார் கார்களை வைத்துக்கொண்டு தக்கமனுஷியாள் ஒவ்வொரு வண்டிக்கும் காத்துக் கொண்டிருந்து ஸபையை உத்தேசித்து வரப்பட்டவர்கள் நன்கு உபசரிக்கப்பட்டு அழைத்துவரப் பட்டனர். கும்பகோணத்துக்கும் புள்ளம பூதங்குடிக்கும் எட்டு மைல் தூரம். ஸ்வாமிமலைக்கும் மேல்படி திவ்ய தேசத்திற்கும் நான்கு மைல் தூரம். இந்த மோட்டார் வண்டிகளின் ஸாஹ்யத்தினுல் ஒரு ஸ்வாமிக்காவது மார்க்க சிரமம் கிடையாது. ஆநந்த பத்தர்களாய் எல்லோரும் குதூகலத்துடன் ஸபையை நடைபெறச் செய்தார்கள். ஸத்காரஸபையின் முக்ய ஸப்யர்களான கதாதரபுரம் சக்கிரவர்த்தி ஸ்ரீ உபய ஸ்ரீநிவாஸாசார்ய ஸவாமியும் கும்முட்டித்தடல் ஸ்ரீ உபய ஜி. கிருஷ்ணஸாமி அய்யங்கார் ஸ்வாமியும் செய்திருந்த ஏற்பாடுகள் ஸபைக்கு வந்தவர்களின் உள்ளத்தைக் கவர்ந்தன. இந்த இரண்டு வ்யக்திகளும் காட்டின பாகவத ப்ராவண்யத்தைச் சொல்வதற்கும் எழுதுவதற்கும் ஒருவராலும் ஸாத்தியப்படாது. கும்பகோணம் கருணைக்கொல்லைத் தெரு ஸ்ரீ உபய கே. பு. நரஸிம்மா சார்யர் ஸ்வாமி இவர்களுக்கு முக்ய ஸஹகாரியாக விருந்து ஸ்வாமிகளுக்கு வேண்டிய உதவிபுரிந்தார்.

ஸ்ரீ சக்ரவர்த்தி ஸ்ரீநிவாஸாசார்யர், அந்த திவ்ய தேசத்து எம்பெருமானுடைய உத்ஸவதினம் தொடங்கியே எம்பெருமான் முகோல்லாஸார்த்தமாக ஸமஸ்த ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கும் உத்ஸவார்த்தமாக வந்த எல்லா ஸ்த்ரீகளுக்கும் திவ்ய ததீயாராதனம் செய்து வந்ததுடன் ஸபா தினங்களாகிய வியாழன் வெள்ளி சனிக்கிழமை இம்மூன்று தினங்களிலும் வித்வான்கள் லௌகிக ப்ரபுக்கள் வேத பாராயணக்காரர்கள் திவ்ய ப்ரபந்தாத்யாபகர்கள் மற்றுமுள்ள ஸாமான்யர்கள் இவர்கள் அனைவருக்கும் வ்யத்யாஸமின்றி ஒரே விதமாக அனுஷ்டித்த ததீயாராதன வைபவத்தால் பரத்வாஜாச்ரமத்தில் ஸ்ரீ பரதாழ்வானுக்கும் அவர் பரிஜனங்களுக்கும் மஹரிஷி நடத்தின ஆதித்யத்தை நினைக்கச் செய்தது. பெருக்கச் சொன்னாலும் இது புகழ்ச்சியாகாது.

நிற்க இவ்வருஷத்தில் நடந்த இச்சபைக்கு ஆத்யக்ஷ்யத்தை வஹித்த ஸ்வாமிகள் குரிச்சி ஸ்ரீ உபய சேஷாத்ரியா சார்ய ஸ்வாமி, காரப்பங்காடு ஸ்ரீ உபய சிங்கப்பெருமாள் ஸ்வாமி, மோஹனூர் ஸ்ரீ. உப. கிடாம்பி ராமாநுஜாசார்ய ஸ்வாமி. வியாழக்கிழமை தினம் வித்வத் ஸபையின் ஆரம்பத்தில் ஸ்ரீ உபய குரிச்சி சேஷாத்ரியாசார்ய ஸ்வாமியை அந்த ஸ்வாமி எழுந்தருளி இருந்த திருமாளிகைக்கு எல்லோரும் பூர்ண கும்பத்துடன் எதிர்கொண்டு சென்று ஸ்வாகத ப்ரச்னம் செய்து வாத்ய கோஷத்துடனும் உபநிஷத் மந்திரகோஷத்துடனும் அழைத்துவந்து திருக்கோயிலில் சென்று ஸபாத்யக்ஷருக்கு பகவத் ஸன்னிதியில் மாலை பரியட்டம் முதலிய ஸகல மரியாதைகளையும் செய்வித்து ப்ரதக்ஷிணமாக வந்து உள்ப்ராகாரத்துக்கு வடபுரத்தில் ஸபைக்கென்று அமைக்கப்பட்டிருந்த விசாலமான பந்தலில் அத்யக்ஷருக்காக குறிப்பிட்டிருந்த ஆஸனத்தில் வீற்றிருக்கச் செய்தார்கள். உடனே கதாதரபுரம் ஸ்ரீ உபய. சக்ரவர்த்தி ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி ஸபாத்யக்ஷருக்கு ஸ்வாகத வந்தனோபசாரம் செய்து அந்த ஸ்தல மகிமையைப்பற்றியும் அங்கே கோவில் கொண்டு எழுந்தருளி இருக்கிற எம்பெருமான் மகிமையைப் பற்றியும் விஸ்தாரமின்றி இனிமையான ஓர் உபன்யாஸம் செய்து வித்வத் ஸமாஜத்தை ஆனந்த வெள்ளத்தில் மூழ்கச்செய்தார். ஸபாத்யக்ஷர் பிறகு அவை யடக்கத்துடன் ஸ்ரீராமானுஜ ஸித்தாந்த மகிமையைச் சுருக்க மாகவும் ஸாரதமமாகவுமுள்ள உபன்யாஸங்களாக பண்டிதர்களும் பாமரர்களும் அறியும்படி தெளிவாக எடுத்துரைத்து தத்வஹித புருஷார்த்தங்களை நன்கு விளங்கச் செய்தனர். அத்துடன் பதினொரு மணிக்கு ஸபை கலைந்தது. மாத்யான்ஹிக பகவதாராதனம் ததீயாராதனங்கள் ஆனவுடன் மறுபடி இரண்டு மணிக்கு ஸபை தொடங்கியது. ஸ்ரீ உபய எ. வி. கோபாலாசாரியர் ஸ்ரீ. உபய. நடாதூர் ஸ்ரீநிவாஸாசாரியார் ஸ்ரீ. உபய இளையவல்லி ஸ்ரீநிவாஸாசாரியார் இவர்கள் எல்லோரும் முறையே உபன்யஸித்தார்கள்.

இரண்டாவது நாள் வெள்ளிக்கிழமை தினம் காரப்பங்காடு ஸ்ரீ. உபய வித்வான் சிங்கப்பெருமாள் ஸ்வாமி, ஸ்ரீ. உப. சக்ரவர்த்தி ஸ்ரீநிவாஸாசார்யரால் ப்ரார்த்திக்கப்பட்டதன் பேரில் அக்ராஸனம் வஹித்தார். அந்த ஸ்வாமி திருமங்கை மன்னன் அர்ச்சாவதாரத்தில் ஈடுபட்ட விஷயத்தை அழகாகவும் விஸ்தாரமாகவும் எடுத்து உபந்யஸித்தார். பிறகு முறையே. ஸ்ரீ உபய சேரங்குளம் வரதாசார்ய ஸ்வாமியும் ஸ்ரீ உபய வித்யாரத்னாகரம் கொடவாசல் நரஸிம்ஹாசார்யர், ஸ்ரீ உபய குரிச்சி ஸ்ரீநிவாஸரங்காசார்யர், தேவனார்வளாகம் ஸ்ரீ உபய லக்ஷ்மிநரஸிம்ஹாசார்யர் முதலிய அனேக வித்வான்கள் பற்பல விஷயங்களை அழகாகவும் சுருக்கமாகவும் உபன்யஸித்தார்கள். மூன்றாவது நாளும் அவ்வண்ணமே ஸ்ரீ உப மோஹனூர் ராமாநுஜாசார்ய ஸ்வாமியின் அக்ராஸனத்

தின் கீழ் ஸபை கூடியது. ஸ்ரீ உப மன்னார்குடி ஸ்ரீநிவாஸா சார்யர், ஸ்ரீ உப. காரப் பங்காடு வெங்கடாசார்யர், ஸ்ரீ உப தட்டை ஸ்ரீநிவாஸாசார்யர், ஸ்ரீ உப ஸ்ரீமுஷ்ணம் சேட்லூர் க்ருஷ்ணமாசார்யர், ஸ்ரீ உப !கநபாடி அநந்தாசார்யர், ஸ்ரீ உப ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீநிவாஸாசார்யர், ஸ்ரீ உப கண்கொடுத்தவனிதம் ஈயுண்ணி மாதவாசார்யர், ஸ்ரீஉப சுண்டப்பாளையம் ஸ்ரீநிவாஸாசார்யர், ஸ்ரீ உபய தோட்டாலம் வேணுகோபாலா சார்யர் முதலான பண்டிதர்கள் தமிழிலும் ஸம்ஸ்கிருத க்ரந்தத்திலுமுள்ள அருமையான விஷயங்களை நன்கு எடுத்து உரைத்தார்கள். ஸாயங்காலம் ஸபை முடிவு பெற்றது. ஸபைக்கு வந்த வித்வான்களுக்கு தக்கபடி ஸம்மானமளிக்கப்பட்டது. பிறகு ஸ்ரீ ஸ்ரீநி வாஸாசார்யர், ஸபை பல்லாண்டு பல்லாண்டாக விருத்தி அடைந்து வரவேண்டுமென்று ஸ்ரீவல்வில்லி ராமனுடைய ஸன்னிதியில் பிரார்த்தித்து வித்வான்கள் அனைவரையும் குளிர்ந்த வாக்கினால் துதித்து மனமகிழ்ந்து ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்தம் தழைத்து ஓங்கி வளர வேண்டுமென்று ஸ்ரீ பாகவதர்களை பக்தி சிரத்தையுடன் வேண்டிக்கொண்டார். உத்ஸவத்துக்கும் இந்த ஸதஸ்ஸுக்கும் வந்திருந்தவர்கள் அனைவரும் ஸ்வக்ரு ஹத்தில் இருப்பவர்கள் போல பரமானந்த பரிதர்களாக சயனாஸந போஜன சுகங்களையும் அனுபவித்தார்கள். இந்த ஸதஸ்ஸில் எழுந்தருளிஇருந்த பண்டிதர்களுக்கு ஸம்மான மளிப்பதற்காக ஸ்ரீ அஹோபிலமடம் அழகிய சிங்கர் இருநூறு ரூபாய் ஸ்வசிஷ்யமுக மாக அனுப்பிக்கொடுத்து பண்டிதர்களை அனுக்ரஹித்தார். மற்ற செலவுகளை கதாதரபுரம் சக்ரவர்தி ஸ்ரீஉபய ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியும் ஸ்ரீஉபய ஜி. கிருஷ்ணஸாமி அய்யங்காரும் ஏற்றுக்கொண்டு கார்யங்களை நிர்வஹித்தனர். இப்படிப்பட்ட பகவத் கைங் கர்யத்தையும் பாகவத கைங்கர்யத்தையும் அதிச்ரத்தையுடனும் பக்தியுடனும் ப்ரேமையுட னும் அத்யாதரத்துடன் செய்து பகவானுக்கும் பாகவதர்களுக்கும் முகோல்லாஸத்தை உண்டுபண்ணின திவ்ய வ்யக்திகள் ஆசந்திரார்க்கஸ்தாயிகளாய் நீடூழிகாலம் வாழ்ந்து ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ப்ரவசனத்தில் ஈடுபட்டு வருமாறு ஸ்ரீ வல்வில்லிராமன் அனு க்ரஹிப்பாராக.

இப்படிக்கு தாஸன்
தட்டை ஸ்ரீ நிவாஸாசார்யர்.
ஸெண்டு ஜோஸப் காலேஜ் பிரதான ஸமஸ்க்ருத பண்டிதர்.

---

(2)

ஸ்ரீ அஹோபிலம் அழகிய சிங்கர் இந்த மஹா ஸங்கத்தை
அநுக்ரஹித்தருளிய ஸ்ரீமுகம்.

ஸாம்ராஜ்ய தத்ஜயஉ வது நத்யாயெதி ஹாவஸாதி ஸத்ஸ வைஸ்ர வநத்வஸநாய வஞ்சிதவநெ: கவத்வா ஸஹா யா திராக। நாநாஷெஸ்ரீ ஜநவ ஸெபாயந கூதெ நாநாத்ஸெநெ ஆஸிதா விஸ்வாஸொஷகரீ ஸஹஸ்த ஸஜந ஸ்ரூாவத்யா அ ஸா வதஉதெ ॥

ஸ்வஸ்தி ஸ்ரீ நரஸிம்ஹ காஸிஜ உநீம் உராஜ்ஞாவஸாநெதூஹி: கவ த்வா ஸா ஷூரஅாவ ஸஹியிதநெ ஸ்ரீ ஹஸ்த கூட்யாம்வஸி। ஷுயாதா

𑌬𑌹𑌵𑍋𑌽𑌤𑍍𑌰 𑌵𑌰𑍍𑌣𑌿𑌤𑌵𑌨𑍍𑌤𑌃 [illegible] 𑌤𑌥𑌾 𑌨𑍇𑌤𑌾𑌰𑌶𑍍𑌚 𑌸𑌹
𑌵𑌿𑌹𑌾𑌯 [illegible] ॥

𑌶𑍍𑌰𑍀 [illegible] 𑌶𑍍𑌰𑍀𑌃 ॥

> 𑌶𑍍𑌰𑍀𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌸𑌭𑌾 𑌭𑌾𑌤𑌿 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍 [illegible] ।
> 𑌯𑌸𑍍𑌯𑌾𑌂 [illegible] 𑌨𑍈𑌵 [illegible] ॥

3

## நிர்வாஹக கமிடியின் கூட்டம்.

ஸ்ரீ வை. ஸி. ஸபையின் வர்ஷாந்தக் கணக்கு வார்ஷிக அறிக்கை இவைகளின் அங்கீகாரம் புதிய வர்ஷத்திற்கு நிர்வாஹக அங்கத்தினரின் நியமநம் இம்மாதிரியான கார்யங்களைச் செய்ய, ஸங்கத்தின் இரண்டாவது திநம் ஸாயம் 5-மணிக்கு ஸபை அங்கத்தினரெல்லாரும் கூடினர்கள். ஸபையின் உபஸபாத்யக்ஷர்களுள் ஒருவராகிய ஸ்ரீ. உப. டி. கோதண்டராம ஐயங்கார் அக்ராஸநாதிபதியாக வரிக்கப்பட்டார்.

முதலில், நிர்வாஹ கமிடியாரால் நிவேதநம் செய்யப்பட்ட வார்ஷிக அறிக்கை (இது சென்ற மாத ஸஞ்சிகையுடன் பிரசுரிக்கப்பட் டிருக்கிறது) அங்கீகரிக்கப்பட்டது. அதற்குப் பிறகு பின்வருமாறு புதிய வர்ஷத்துக்கு நிர்வாஹ கமிட்டி அங்கத்தினர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

**போஷகர்.**

ராவ்ஸாகிப் ஸ்ரீ உ வே டி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், டில்லி.

**ஸபாத்யக்ஷர்.**

கனம் ஜஸ்டிஸ் ஸ்ரீ உ வே. வ. வே. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், சென்னை.

**ஸபாத்யக்ஷ ப்ரதிநிதிகள்.**

ஸ்ரீ. உ. வெ. எஸ். ராஜகோபாலாச்சார்யர் (மன்னார்குடி.)
,, டி. கோதண்டராம அய்யங்கார் (தஞ்சை.)
,, எ. வி. கோபாலாச்சாரியார் (திருச்சி.)
,, வி. பாஷ்யமய்யங்கார் (மதுரை)
திவான்பகதூர் வி. ராமபத்ர நாயுடுகாரு, தொட்டப்ப நாய்க்கனூர் ஜமீன்தார்.

114



## கார்யதர்சிகள்.

ஸ்ரீ உ வெ எஸ். கோபாலஸ்வாமி அய்யங்கார் (மயிலாப்பூர்.)
,, எஸ். லக்ஷ்மிநரஸிம்மாசாரியர் (திருவல்லிக்கேணி.)

## நிர்வாஹக கமிடி மெம்பர்கள்.

ஸ்ரீ. உ. வெ. நடாதூர் என். ஸ்ரீநிவாஸாசாரியர், புரசைவாக்கம்.
,, ராவ்ஸாகிப் டி. ராமாநுஜய்யங்கார், திருவல்லிக்கேணி.
,, கெ. வி. கிருஷ்ணமாசாரியர், திருவல்லிக்கேணி.
,, கெ. டி. ஸுந்தரராஜாசாரியர், முத்தியாலுபேட்டை.
,, எ. ரங்கஸ்வாமி ஸரஸ்வதி, திருவல்லிக்கேணி.
,, டி. வி. நீலமேகாசார்யர், கீழ்ப்பாக்கம்.
,, டி. ஆர். ராஜகோபாலாச்சார்யர், புரசைவாக்கம்.
ஸ்ரீமான் எஸ். வெங்கடாசலம்பிள்ளை, புரசைவாக்கம்.
ஸ்ரீ உ. வே. எஸ். வராஹஸ்வாமி அய்யங்கார், திருவல்லிக்கேணி.
,, பி. என். ஸ்ரீநிவாஸாசாரியர், மயிலாப்பூர்.
,, டி. இ. சடகோபாசார்யர், திருப்பாப்பிலியூர்.
,, என். டி. ஸ்ரீராமாச்சார்யர் ,,
,, சக்ரவர்த்தி. வி. ஸ்ரீநிவாஸாசார்யர் கும்பகோணம்
,, கும்மட்டித்திடல் ஜி. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், கும்பகோணம்.
,, எ. ராகவாசார்யர், கும்பகோணம்.
,, எம். எஸ். கிருஷ்ணமாச்சாரியர், ஸ்ரீரங்கம்
,, எஸ். யாமுனதாதாசார்யர் ,,
,, ஆர். ஸ்ரீநிவாஸாசார்யர், புதுக்கோட்டை
,, எம். எஸ். சேஷய்யங்கார் எம். எல். எ. மதுரை.
,, என். ஆர். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், மதுரை.
,, ஆர். ரங்காசார்யர், திருநெல்வேலி
,, ஜெ. வரதராஜ அய்யங்கார், ,,
,, வி. வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ,,
,, வி. ஆர். ஸ்ரீசைல சக்ரவர்த்தி, கோயமுத்தூர்.
,, கிடாம்பி ராமாநுஜாசார்யர், மோஹனூர்.
,, கே. வி. வெங்கடாசார்யர், நாமக்கல்.
,, வி. என். செல்லமய்யங்கார், சேலம்.
,, டி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், சேலம்.
,, கெ. டி. பார்த்தஸாரதி அய்யங்கார், வேலூர்.
,, ராவ்ஸாகிப் டி. எஸ். ஸ்ரீநிவாஸராகவாசார்யர், ஹைதராபாத்.
,, ஸ்ரீ. வாஸுதேவாசார்யர், மாம்பலம்.

## பத்ராதிபர்.

ஸ்ரீ. உ. வெ. ஸ்ரீ. வாஸுதேவாசார்யர் ஸ்வாமியே பத்ராதிபராக இருந்து வர வேண்டுமெனப் பிரார்த்திக்கப்பட்டது.

மிகுந்த க்ருபையுடன் பெரிய த்ரவ்யஸஹாயம் செய்தும் ஸ்ரீ முகத்தால் அநுக்ரஹித்தும் ஸபையை க்ருதார்த்தமாக்கின ஸ்ரீ அஹோபிலம் அழகிய சிங்கருக்கும், அநந்ய ப்ரயோஜநமாக ஸங்கத்தை த்ருப்திகரமாக நடத்திவைத்த திருக்குடந்தை ஸ்தலவாஸிகளான ஸ்ரீ உப சக்ரவர்த்தி ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்ரீ உப. ஜி. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் முதலான ஆஸ்திகர்களுக்கும், உபந்யாஸங்களால் உபகரித்த வித்வாந்களுக்கும் யதார்ஹம் க்ருதஜ்ஞதாவிஷ்கரணம் செய்த பிறகு கூட்டம் கலைந்தது. நமது நிர்வாஹ கமிடியில் ஒருவராகவும் ஸபைக்கு வெகுகால ஸுஹ்ருத்தாகவுமிருந்த ஸ்ரீஉப. எஸ். டி. க்ருஷ்ண ஐயங்கார் ஸ்வாமி இவ்வர்ஷத்தில் திருநாடு அலங்கரித்ததைப்பற்றி ஸப்யர்களுடைய சோகமும் வெளியிடப்பட்டது.

சே. லக்ஷ்மீநரஸிம்ஹாசார்யர், கார்யதர்சி.

---

ஸ்ரீ:

## புஸ்தக விமர்சம்.

### தத்வத்ரய நிருபணம்.

இந்தச் சிறிய க்ரந்தம், ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸ்ரீமந் நாராயண மஹாமுநிகளால் அநேக உபநிஷத் வாக்யங்களிலிருந்து ஸங்க்ரஹித்து அருளிச் செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஸ்வாமியுடைய அநுஷ்டாந வைராக்ய விசேஷங்களையும் யோக சாஸ்த்ரஸம்பத்தமான பாண்டித்யத்தையும் ஸாக்ஷாத்தாக அறியும்படியான பாக்யத்தை நாம் பெற்றிருக்கிறோம். ஸகல ஜநங்களும் ஆத்மோஜ்ஜீவநம் பெறுவதற்கு உபகாரமாக இருக்க வேண்டுமென்று எண்ணியே, இந்த ஸ்வாமி, அவ்யாஜ க்ருபையால், இந்த க்ரந்தத்தை அநுக்ரஹித்திருக்கிறார் என்பதில் ஆக்ஷேபமில்லை. இதை அபேக்ஷிப்பவர்கள் 'ஸ்ரீ உப. கநபாடி ராமபத்ராசார்யர், கநபாடி அக்ரஹாரம், மன்னார்குடி" என்னும் 'விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். இதன் விலை அணா 8.

ஸ்ரீ :

## பஞ்சாங்க ஸங்க்ரஹம்.

ப்ரபவஹூ ஆனிமீ (1927 ஜூன்—ஜூலை.)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஜூன் | 15 | ஆனி | 1 | பு | பௌ | 22-27 | கே | 20- 0 | ஷடசீதி மிதுந ஸங்க்ரமண ச்ராத்தம். |
| ,, | 16 | ,, | 2 | வி | ப்ர | 30-30 | மூ | 20- 7 | மிதுந க்ருஷ்ண த்விதீயை திதி. |
| ,, | 25 | ,, | 11 | சனி | ஏகா | 28-35 | பர | 47-50 | ஏகாதசி வ்ரதம் திதி. |
| ,, | 27 | ,, | 13 | தி | த்ர | 20- 9 | ரோ | 43-46 | மிதுந க்ருஷ்ண த்ரயோதசூர். திதிகள். |
| ,, | 28 | ,, | 14 | செ | சது | 17-26 | மிரு | 43-11 | அமாவாஸ்யை திதி. |
| ,, | 29 | ,, | 15 | பு | அமா | 15.51 | திரு | 44- 5 | மிதுந சுக்ல ப்ரதமா திதி. |
| ,, | 3 | ,, | 19 | ஞா | சது | 21-58 | மக | 59*24 | அதிதி. |
| ,, | 4 | ,, | 20 | தி | பஞ் | 26-10 | பூர | 60- 0 | மிதுநசுக்ல பஞ்சமி திதி |
| ,, | 9 | ,, | 25 | ச | தச | 48-55 | சுவா | 30-39 | பெரியாழ்வார் திரு நக்ஷத்ரம். |
| ,, | 10 | ,, | 26 | ஞா | ஏகா | 51-21 | விசா | 35- 1 | ஏகாதசி வ்ரதம் திதி. |
| ,, | 11 | ,, | 27 | தி | துவா | 52-21 | அநு | 38- 1 | ஸ்ரீமந் நாதமுநிகள் திரு நக்ஷத்ரம். |
| ,, | 14 | ,, | 30 | வி | பௌ | 47-30 | பூரா | 39-30 | மிதுந பூர்ணிமா திதி. |
| ,, | 15 | ,, | 31 | வெ | ப்ர | 43-41 | உத் | 37-47 | மிதுந க்ருஷ்ண ப்ரதமை திதி. |

மிகுந்த வாத்ஸல்யத்துடனும் ஸங்கத்தையும் அது வழியாக ஸபையையும் ஸ்ரீமுகம் மூலமாக அநுக்ரஹித்தருளினர் என்பதும் நமக்கு அதிகமான ஸந்தோஷத்தைக் கொடுக்கின்றது. பகவத் ப்ரியர்களுடைய கடாக்ஷம் பகவத் கடாக்ஷம் போலவே ஸர்வ ச்ரேயஸ்கரமன்றோ?

ப்ரபவ வருஷத்திய ஸதஸ்ஸை அகண்டகாவேரீ தீரத்திலுள்ள மோஹனூர் என்னும் இடத்தில் நடத்த வேண்டுமென்று அங்கிருந்து எழுந்தருளியிருந்த ஸ்வாமிகள் ஆஹ்வாநம் செய்தார்களென்றும் நாம் அறிகிறோம். சேலம் திருச்சினாப்பள்ளி பக்கங்களில் நமது ஸதஸ் இது வரையில் நடத்தப்பட்டதில்லை. தவிரவும் அங்குள்ள ஆஸ்திகர்களெல்லாரும் ஸபைக்குச் சிரகாலத்திய ஸுஹ்ருத்துக்கள்; ஸபை விஷயத்தில் மிகுந்த ச்ரத்தையும் உத்ஸாஹமும் அவர்களுக்கு உண்டு என்பதை நாம் அறிவோம். ஆகையால் ஸபையின் அதிகாரிகள், ப்ரீதி பூர்வமாகச் செய்யப்படும் இந்த ஆஹ்வாநத்தை அங்கீகரிப்பார்களென்று நாம் நம்புகிறோம்.

* * * *

**ஸ்ரீகருணாகர பகவத் பக்த ஸமாஜம்**

இப்பொழுது ஜகத்தில் தைவ பக்தி என்பது கொஞ்சம் கொஞ்சமாக மலிநமாகிக் கொண்டு வருவதை எல்லாரும் பார்க்கலாம். ஜநங்களுக்குள் பரஸ்பரம் ஸௌஹார்த்தமும் குறைந்துகொண்டே வருகின்றது. இவைகளுக்கு எதிர்த்தட்டான அஹங்காரமும் மமகாரமும் அபிவ்ருத்தங்களாகி வருகின்றன. இந்தத் துஸ்திதியை உணர்ந்த சில பெரியோர்கள் அதை மாற்றுவதற்காகப் பற்பல உபாயங்களைத் தேடிவருகிறார்கள். நமது தேசத்தில் ஸ்ரீமாந் டாகூரின் 'சாந்தி நிகேதந' த்திலும், இன்னும் இது போன்ற மற்றை குரு குலங்களிலும் அவ்வுபாயங்களுட் சிலவற்றைப் பார்க்கலாம். ஸ்வல்ப திநங்களுக்கு முன், இம்மாதிரியான ப்ரயோஜநத்தையே கருதி ஸ்ரீமாந் எம். கே. ஆசார்யர் என்னும் ஒரு பெரியவர் ஸ்ரீபெரும்பூதூரில் "ஸ்ரீகருணாகர பகவத் பக்த ஸமாஜம்" என்று ஒரு ஸமாஜத்தை ஏற்படுத்தினர். இவருடைய முக்யமான கருத்து, பல ஸாத்விக பண்டித பெரியோர்களைக் கொண்டு பலவிடங்களில் தைவ பக்தியைப் பற்றியும் காம க்ரோதம் முதலியவற்றை த்யஜிக்க வேண்டிய விஷயத்தைப் பற்றியும், ஜநங்களெல்லாரும் பரஸ்பரம் ஸுஹ்ருத்துக்களாகவே இருக்க வேண்டும் என்பதைப் பற்றியும் அநேக உபந்யாஸங்களைச் செய்வித்து, அவற்றின் வழியாக ஜநங்களுக்கு நல்ல மநோபாவத்தை ஜநிப்பித்து, இப்பொழுது பரஸ்பரம் கலஹம் செய்துகொண்டிருக்கும் ஜநங்களை ஐகமத்யத்துடனும் ப்ரீதியுடனும் ஒன்று சேர்ந்து வஸிக்கும்படிச் செய்யவேண்டும் என்பதே யாகும். இந்தக் கருத்தை நாம் மிகவும் ஆமோதிக்கிறோம். இம்மாதிரி உபதேசங்களை அபே

க்ஷிக்கும் ஜனங்கள் பஹுவாக இருக்கிறார்கள் என்று அவர் சொல்லுகிறார். ஸ்ரீ சரண்யன் திருவுள்ளம் பற்றும் பக்ஷத்தில் இந்த ப்ரயத்நத்தை ஜகத் முழுவதற்குமே பெரிய ச்ரேயஸ்ஸைச் செய்விக்கக் கூடியதாக அவன் அநுக்ர ஹிக்கலாம். ஸாதுவான மநோ பாவத்தைக்கொண்டு செய்யப்படும் ப்ரயத்ந மெல்லாவற்றையும் அநுக்ரஹிக்கும் சீலவானானதால் பகவான் இதையும் கடாக்ஷித்தருளுவனென்றே நாம் நம்புகிறோம்.

சிலர், 'இம்மாதிரியான உபதேசங்களால் என்ன பயன் விளையும்? ஸ்வபாவத்திலேயே நல்ல குணம் உள்ளவர்கள் இம்மாதிரி உபதேசம் பெறு விட்டாலும் நல்ல குணத்துடன் கூடியவராகவே இருப்பார்கள்; ஸ்வபா வத்தால் அசுத்த சிந்தையுள்ளவர்கள் கணக்கற்ற உபதேசம் பெற்ற போதி லும் துஷ்டராகவே இருப்பார்கள். ஒரே மாதா பிதாக்களுக்குப் புத்ரர்களாக ஜநித்து ஒரே ஆசார்யனிடத்தில் சிக்ஷை பெற்று, ஒரே விதமான ஸம்ஸர்க் கத்திற்குப் பாத்ரமாகி இருக்கும் இரண்டு வ்யக்திகளுக்கு மநோபாவ மும் நடத்தையும் வெவ்வேறாக இருப்பதை நாம் பார்க்கவில் லையா? ஆகையால் இம்மாதிரியான உபந்யாஸங்களாலும் உபதேசங் களாலும் ஜகத்துக்கு எவ்வித நன்மையும் ஜநிக்கப் போகின்றதில்லை' என்று ஆக்ஷேபிக்கிறார்கள். இவர்களுக்கு நாம் சொல்லும் ஸமாதாநம் ஒன்றே. ப்ரயத்நம் பலவத்தாக ஆனாலும் ஆகாவிட்டாலும் 'இது ஸாதுவான ப்ரயத்நம்' என்னும் எண்ணம் நமது மநஸ்ஸில் இருக்கும் வரை யில் நாம் அதைச் செய்யவேண்டியது நமது கடமையே. தவிரவும், உபதே சங்களும் ஸம்ஸர்க்கங்களும் உரியகாலத்தில் உரியபடி செய்யப்பட்டால், அவை மநுஷ்யர்களுக்கு ஸ்வபாவத்தினால் வந்திருக்கும் வாஸநையின் கடுமை யைக் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றும் என்பது அநுபவத்திலிருந்து தெரிகி ன்றது. இப்படி அவை மாற்றக்கூடிய சக்தி வாய்ந்திருப்பதனாலன்றோ நமது பெரியோர்கள் ஸத்ஸங்கத்தைச் செய்யவேண்டுமென்றும் மஹாங்களை அநுவர் த்தித்து அவர்கள் உபதேசங்களைக் கேட்கவேண்டுமென்றும் சாஸ்த்ரங்களில் போதித்திருக்கிறார்கள்? அந்த நோக்கத்தை மநஸ்ஸில் வைத்துக் கொண்டன் றோ அவர்கள்பல ப்ரகாரமாக மஹாஜநங்களுக்கு ஸதுபதேசத்தைச் செய்யவும் ப்ரவ்ருத்தித்திருக்கின்றார்கள்? இம்மாதிரியான ப்ரவ்ருத்திகள் பூர்ணமான பல த்தை உடனே கொடுக்காவிட்டாலும் காலக்ரமேண ஒருவாறு கொடுக்கும் என்பது திண்ணம். தவிரவும், தரித்ரனுக்கு ஸம்பந்நன் பிச்சையிடுவது போல வும், அசக்தனுக்கு சக்தன் உபகாரம் செய்வது போலவும், தர்ம ஸம்மூடர்க ளான ஜநங்களுக்குத் தர்மம் அறிந்தவர்கள் உபதேசம்செய்வது சாஸ்த்ரத்தில் விஹிதமாயுள்ள ஒரு கடமையே. அழைக்கப்படாமல் உபதேசம் செய்யப் போனால் ஸாக்ஷாத் தீமையே சிலவிடங்களில விளைந்தாலும் விளையலாம். ஆனால் அவைகளைச் சற்றேனும் பாராட்டாமல் நமது பெரியோர்கள் அம்மார் க்கத்தில் ப்ரவ்ருத்தித்திருக்கிறபடியால், நாமும் அம்மாதிரி ப்ரவ்ருத்தித்து

நம்மைக் காட்டிலும் தாழ்ந்த நிலைமையிலுள்ளோருக்கு யதாசக்தி ஸ்வயமாகவே உபகரிக்க வேண்டியது அவச்யமாகின்றது.

இது ஸம்பத்தமாக விஜ்ஞாபித்துக் கொள்ளவேண்டிய விஷயம் மற்றொன்று உண்டு. அது என்னென்னில், இம்மாதிரியான உபதேசத்தைப் பெறுவதற்கு எவ்வித அவகாசமுமின்றிக்கே பால்யம் தொடங்கி ப்ரதிதினமும் காலைமுதல் ஸாயம் வரையில் கூலிவேலை செய்து பிழைத்து வரும்படியான கர்ம பலத்திற்குப் பாத்ரமாக இருக்கும் ஸாமாந்ய ஜனங்களையும் இன்னும் அவர்போன்ற பிறரையும் உத்தேசித்தே ஸ்ரீ. ஆசார்யர் முக்யமாக இந்த ஸமாஜத்தை ஏற்படுத்தி இருக்கிறார் என்று நாம் அறிகிறோம். இவ்வித ஏற்பாடு மிகவும் ச்லாக்யமே. அதிமாத்ரம் தீனர்களாகவும் வேறு எவ்வித புகலுமற்றும் நிற்கும் இந்த ஜனங்களுக்கு ஆத்ம ச்ரேயஸ்ஸைக் குறித்துக் கண் திறப்பது பெரிய புண்யமே. ஆனால், அவர்களைக் காட்டிலும் கொஞ்சம் உயர்ந்த ஸ்திதியில் இருப்பவர்களும், கலியின் கொடுமையாலும் பாச்சாத்யர்களுடைய ஸம்ஸர்க்கத்தாலும் ஆத்ம விஷயமான ச்ரேயஸ்ஸைப்பற்றிச் சிந்தியாமலே அர்த்த காம பரர்களாகி, அது காரணமாக அஹங்கார மமகாரங்களை வ்ருத்தி செய்துகொண்டு, ஸாத்விகத் தன்மையிலிருந்து நழுவினவர்களாய், ஆத்ம ப்ரம்சத்தைத் தேடிக்கொள்வதை நாம் எல்லாவிடங்களிலும் பார்க்கிறோம். இங்க்லிஷ் பாஷையைப் படித்து வ்யபதிஷ்டர்களென்று ஜனங்களால் கொண்டாடப்பட்டு வருகிற பெரியோர்களுட் சிலரும் அஹங்காரத்திற்குப் பரவசமாகித் தம்மைப் போன்ற மற்றை பெரியோர்களிடத்தில் அஸூயை செய்து கக்ஷி ப்ரதிகக்ஷிகளை ஏற்படுத்திக்கொண்டு க்யாதி பூஜை முதலியவைகளில் நோக்கமுள்ளவர்களாகவே படிப்பற்ற ஜனங்களுக்கும் தமக்கும் எவ்வித வாசியுமற நடந்து வருகிறார்கள். இங்க்லிஷ் பாஷையின் படிப்பும் அதிலுள்ள க்ரந்தங்களின் பரிசீலநமும் ஒருவித புத்தி ஸம்ஸ்காரத்தையும் மநோவ்ருத்தியின் ஔதார்யத்தையும் ஜநிப்பிக்கின்றன என்பதில் ஆக்ஷேபமில்லை. ஆனால் அந்த ஸம்ஸ்காரமும் ஔதார்யமும் பூர்ணமாக வளராததனால் அவை சாச்வதமான நிலையைப் பெறுமலும் நல்ல பயனை அளிக்காமலும் போகின்றன. நம்மிடத்தில் இருக்கும் காமக்ரோதங்கள் தொலைந்தாலன்றோ க்ரந்த பரிசீலநத்தால் ஏற்படும் ஸம்ஸ்காரம் நிலைபெற்று நிற்கும்? அம்மாதிரி காம க்ரோதம் முதலியவைகளைத் தொலைப்பதற்கு இவர்கள் என்ன ஸாதநம் செய்திருக்கிறார்களோ? என்ன ஸாதநத்தைத்தான் செய்யவேண்டுமென்பதை அவர்கள் பராமர்சித்திருக்கிறார்களோ? என்றும் நமக்கு ஸந்தேஹம் ஜநிக்கின்றது. ஹார்த்தமான பகவத் பக்தியுடன் சேர்ந்த தத்வஜ்ஞாநம் தவிர மற்றை எதுதான் அதற்குத் தகுந்த ஸாதநமாகமாட்டும்? அந்தப் பக்தியும் ஜ்ஞாநமும், பரீக்ஷாந்தரப் பயிற்சியுடனும் அதனால் ஏற்படும் புத்தி விகாஸத்துடனும்

கலந்து நின்றால், அவை நமது இஷ்டத்தைப் பூர்ணமாக ஸாதித்துக் கொடுத்து ஜகத் முழுவதற்கும் பெரியதொரு ச்ரேயஸ்ஸை நிச்சயமாக ஜநிப்பிக்கும் என்பது நமது உறுதியான நம்பிக்கை. ஆகையால் ஸ்ரீமாந் ஆசார்யர் கல்வியறிவற்ற ஸாமாந்ய ஜநங்களைக் கருதுவது போல படிப்பு முதலிய ஆநுகூல்யங்களைப் பெற்றிருக்கும் ஜநங்களையும் க்ரஹித்துக்கொண்டு, அவர்களுக்கு உபகாரகமாயுள்ள மார்க்கத்தையும் தேடவேண்டுமென்பது நமது ப்ரார்த்தனை. எவ்வித படிப்புமின்றிக்கே கேவலம் தேஹயாத்ரைக்காக மாத்ரம் ஆயுள் நாள்களைச் செலவிட்டு வரும் ஸாமாந்ய ஜநங்களைக் காட்டிலும், இவர்களுடைய தைந்ய ஸ்திதியே நம்மை அதிகமாக வருத்துகின்றது.

இவர்களுக்கு நாம் செய்யக் கூடியது என்னவென்று ஆலோசித்தால், ஏற்கெனவே நாம் பல தடவை இந்தத் தீபிகையில் விஜ்ஞாபித்துக் கொண்டிருக்கும் ப்ரகாரம், அவர்களுடன் கலந்து அவகாசம் அகப்படும் பொழுதெல்லாம் தைவ பக்தியையும் நமது சாஸ்த்ரங்கள் போதிக்கும் தத்வ ஜ்ஞானத்தையும் அவர்களுக்கு எடுத்து உரைத்து, அவர்களாற் செய்யப்படும் ஆக்ஷேபங்களுக்கும் அவர்களுக்கு அவ்வப்போது ஜநிக்கும் ஸந்தேஹங்களுக்கும் சாஸ்த்ரோக்தமான ஸமாதாநங்களை யுக்தியுக்தமாகச் சொல்லிக் கொஞ்சம் கொஞ்சமாக அவர்களைத் திருப்ப ப்ரயத்நம் செய்ய வேண்டும் என்பதுதான். அவர்கள் ஒருவித புத்தி ஸம்ஸ்காரத்தைப் பெற்றிருக்கிற படியால், துராக்ரஹத்துக்குப் பாத்ரமாக இருக்க மாட்டார்கள் என்பது நமது அபிப்ராயம். மற்றும் ஒரு விஷயத்தை நாம் மறக்கக்கூடாது. ஏதோ ஒரு அபிநிவேசத்தாலோ அல்லது பராமர்சக் குறைவினாலோ, நாம் சாஸ்த்ரம் சொல்லாத பல விஷயங்களை நமது மதக் கொள்கைகளுள் அந்யதமங்களென்று பாராட்டி வருகிறோம். அவைகளுட் சில பரிஹாஸாஸ்பதங்களாக இருக்கின்றன; மற்றும் சில யுக்திக்கும் ந்யாயத்திற்கும் விருத்தங்களாக் இருக்கின்றன. அவைகளை நாம் சாஸ்த்ர விஹிதங்களாயுள்ள மற்ற விஷயங்களைப் போல பயபக்தியுடன் அநுஷ்டித்து வருவதும், அவ்வைகளை அநுஷ்டிக்காமல் இருக்கும் மற்றவர்களிடம் த்வேஷம் கொண்டாடுவதும் நமது விவேகத்திற்கு அநுரூபமாகமாட்டா. அவைகளை ஆத்யந்திகமாக த்யஜிக்கவும், சாஸ்த்ர விஹிதங்களாயிருக்கும் விஷயங்களுள் ந்யாயத்தைக்கொண்டு ப்ரதாந அப்ரதாந விவேசநம் செய்யவும் நாம் ப்ரயத்நப்படவேண்டும். இப்படியெல்லாம் ப்ரயத்நப்பட்டுக்கொண்டு வருவதுடன் நடத்தையிலும் உபதேசத்திலும் உபசாந்தியுடனும் ஆர்ஜவத்துடனும் வர்த்தித்துவந்தால் நமது அநுஷ்டாநம் ஸ்ரீ சரண்யனுக்கு உகப்பாயிருக்கும்; இந்த ஜநங்களுக்கும் அதிமாத்ரம் உபகாரகமாக இருக்கும். இதுதான் இவர்கள் விஷயத்தில் உசிதமான ஸாதநமென்று நமக்குத் தோன்றுகிறது.

121



இது மாத்ரம் நமது இஷ்ட ஸாதநத்திற்கு அபர்யாப்தம். கால கதியை அநுஸரித்து நாம் நமது பாலர்களை ஜீவநத்திற்கு வேண்டிய யோக்யதையை ஸம்பாதித்துக் கொள்ளும் பொருட்டு அந்யர்களிடம் ஒப்புவிக்கிறோம். அந்த ஆசார்யர்கள் தமக்கு உசிதமாகத் தோன்றுமவைகளை யெல்லாம் அவர்களுக்குப் போதிப்பிக்கிறார்கள். இளமைப் பர்வத்தில் போதிக்கப்படுவது அவர்களுடைய மநஸ்ஸில் நிலைபெற்று விடுகிறது. அது ஸாதுவாக இருக்கும் வரையில் எவ்வித தீங்கும் நேர்வதில்லை; அஸாதுவாக இருந்து விட்டாலோ அவர்களுக்கு அது ப்ரபலமான தீமையை ஜநிப்பித்து விடுகின்றது. தவிரவும், நாம் எதை ஸதுபதேசமென்றும் ஸதாசாரமென்றும் க்ரஹித்திருக்கிறோமோ அதை அவர்களுக்கு அந்த இளமைப் பர்வத்தில் போதிப்பிக்க அவகாசம் இல்லாமலும் போகின்றது. மேலும், சில வர்ஷ காலமாக கேவலம் பாஷாந்தராப்பாஸமும் அதில் தேர்ச்சி பெறுவதும் ஜீவநோபயோகிகளாகாமல் நமது சிறுவர்கள் கஷ்டப்பட்டு வருவதையும் நாம் பார்க்கிறோம். இவையெல்லாவற்றையும் ஆலோசித்துப் பார்க்கும் பொழுது 'பூர்வகாலம்போல ஏன் நாமே நமக்கு அபேக்ஷிதங்களான குருகுலங்களை ஸ்தாபித்துக் கொள்ளக்கூடாது? நமது பாலர்களுக்கு ஆத்ம ச்ரேயஸ்ஸுக்கும் தேஹயாத்ரைக்கும் உபகாரகங்களான ஸம்விதாநங்களை நாமே ஏன் ஏற்படுத்திக்கொள்ளக் கூடாது?' என்று ஒரு எண்ணம் தோன்றுகிறது. நமது சாஸ்த்ரத்தை ஒரு வித ஆக்ரஹத்துடன் அப்பஸித்து, நமது சாஸ்த்ர கர்த்தாக்களுடைய அந்தரங்க அபிப்ராயத்தைச் சரியாக உணராமல் தவறுதலான அபிநிவேசம் கொண்டு நமது மதத்திற்கு வெளிப்பட்டிருக்குமவர்களிடம் த்வேஷம் பாராட்டி அநுதாரமான சிந்தையுடன் எவ்வித உபசாந்தியுமில்லாமல் நிற்கும் சில வைதிகர்களையும், நமது சாஸ்த்ரம் சொல்வது என்ன என்பதை அறிந்துகொள்ள எவ்வித ப்ரயத்நமும் செய்யாமல் கேவலம் பாஷாந்தர மதாந்தர அப்பாஸத்தை மாத்ரம் செய்து அதனால் பண்டிதம் மந்யர்களாய் நமது கொள்கைகளையும் அநுஷ்டாநங்களையும் கேவலம் மௌட்யப்ரயுக்தங்களென்று தூஷித்துக்கொண்டு உண்மையான ச்ரேயஸ்ஸைக் கொடுக்கக்கூடிய ஜ்ஞாநத்திலிருந்தும் ஆசாரங்களிலிருந்தும் நழுவினவர்களாய் மனம்போனவாறே அசநம் ஆச்சாதநம் இவை முதலியவைகளைச் செய்துகொண்டு தட்டித்தடுமாறி நிற்கும் லௌகிகர்களையும் பலகாலும் பார்த்து நாம் பலவாறாக அநுதபித்திருக்கிறோம். இப்படி அநுதபித்திருந்தும், நமது அயோக்யதையும் சக்திக் குறைவுமே அந்தத் துஸ்திதியை நிவ்ருத்திப்பிக்க வேண்டுவதான வ்யாபாரங்களில் ப்ரவ்ருத்திக்க வொட்டாமல் நம்மைத் தடுத்துவிட்டன. ஜ்ஞாந சக்தி ஸம்பந்நர்களான பெரியோர்கள் இதன் ஸாது பாவத்தை உணர்ந்து இதன் நிஷ்பத்தியைத் தேட முயல்வரேல், நாமும் அவர்களுடைய அநுசரர்களாய் யதா சக்தி உழைப்பதற்கு ஸந்நத்தராக இருக்கிறோம்.

122



* * *

**கும்ப யோகம்**

தக்ஷிண தேசத்தில் கும்பகோணம் என்னும் ஸ்தலத்தில் 'மஹாமகம்' என்னும் புண்ய காலம் போல, உத்தர தேசத்தில் 'கும்ப யோகம்' என்னும் ஒரு புண்யகாலம் பன்னிரண்டு வருஷங்களுக்கு ஒரு முறை ஸம்பவிக்கிறதென்றும், அந்தக் காலத்தில் ஹரித்வாரம் என்னும் புண்ய க்ஷேத்ரத்தில் கங்காநதி பூமியை ஸ்பர்சிக்குமிடத்தில் ஸ்நாநம் செய்வது பெரிய பலங்களைக் கொடுக்கிறதென்று அந்தத் தேசவாஸிகளான ஹிந்துக்கள் அதைக் கொண்டாடுகிறார்களென்றும் நாம் அறிகிறோம். இந்த ஸம்வத்ஸரத்தில் அந்தப் புண்ய காலம் சென்ற பங்குனி மாஸக் கடைசியில் ஸம்பவித்ததாம். அப்பொழுது ஹரித்வாரத்தில் சற்றேறக்குறைய ஒரு கோடி ஜநங்கள் சேர்ந்தார்களாம். மேற்கில் பஞ்சாப் தேசத்திலிருந்தும் கிழக்கில் பங்காளத்திலிருந்தும் ஸமீபத்திலுள்ள ப்ரயாகை காசி முதலான இடங்களிலிருந்தும் பாலர்களும் வ்ருத்தர்களும் சிசுக்களுடன் கூடிய ஸ்த்ரீகளும் அளவற்ற ச்ரத்தையுடன் அவ்விடத்தில் சேர்ந்து கங்கா ஸ்நாநம் செய்து மிக்க நிர்வ்ருதியை அநுபவித்தார்களென்று நாம் கேள்விப்படுகிறோம். இதைக் கேட்க நமக்கு மிகுந்த ஸந்தோஷம் ஜநிக்கின்றது. கலியின் மஹிமையால் இம்மாதிரி கர்மங்களில் ஹார்த்தமான ச்ரத்தையை ஜநங்கள் இழந்துவிட்டார்களென்று நாம் நினைத்திருந்தோம். அப்படி ச்ரத்தை ஆத்யந்திகமாக லுப்தமாகி விடவில்லையென்று இதனால் தெரிந்து நாம் ஸந்தோஷமடைகின்றோம்.

இம்மாதிரி அத்ருஷ்ட பலத்தில் ச்ரத்தையுடன் கேவலம் ஆப்த வாக்யத்தை ப்ரமாணமாகக் கொண்டு கர்மங்களை அநுஷ்டித்து வரும் ஜநங்களை மூடர்களென்று சிலர் பரிதபிக்கிறார்கள். 'அத்ருஷ்டம் என்பதே இல்லை, அது முற்றிலும் பொய்' என்று அவர்கள் நிராக்ஷேபமாக நிரூபித்தால், அப்பொழுது அவர்கள் அம்மாதிரி பரிதபிப்பது யுக்தமாகும்; அதை நம்பும் ஜநங்களும் மூடர்களாவார்கள். அப்படி அவர்கள் நிரூபிக்கவில்லையே. 'அது நம்முடைய புத்திக்கு எட்டாதது; அது இருக்கின்றது என்று நமக்கு நிரூபிதமானாலொழிய அதை நாம் நம்பமாட்டோம்' என்று மாத்ரமேயன்றோ அவர்கள் சொல்வது? சில விஷயங்கள் ப்ரத்யக்ஷ நிரூபணத்துக்குத் தகாதவையாகவும் அநுபவ மாத்ரத்தாலே அறியக்கூடியவையாகவும் இருக்கின்றன என்பதை அவர்கள் அறியவில்லையே! நமது ருஷிகள் அம்மாதிரியான விஷயங்களை ஸாக்ஷாத்தாக அநுபவித்து, 'அத்ருஷ்டம் என்று ஒன்று உண்டு; அதை நம்பி அநுஷ்டித்தால் அது பலத்தைக் கொடுக்கும்' என்று அவர்கள் தமது அநுபவ பலத்தைக்கொண்டு உபதேசித்திருக்கிறார்களே. அந்த வார்த்தையை நாம் ஏன் அநாதரிக்க வேண்டும்? அப்படி அவர்களுடைய அபூர்வம் முழுவதையும் அநாதரித்து விட்டால், பஹு காலமாக மஹத்

தான ப்ரயாஸத்தின் பேரில் நமது பெரியோர்களால் ஸம்பாதிக்கப்பட்டு நமக்குத் தாயதநம் போல இறங்கி வரும் அநர்க்கமான நிதியை நாம் இழந்தவர்களாவோமென்றே நாம் சோகிக்கிறோம்.

'இம்மாதிரியான ஸ்நாநம் முதலிய கர்மங்கள் பலத்தில் இச்சையுடன் செய்யப்பட்டால் அவை சாச்வதமான பேராநந்தத்திற்குக் காரணமாகமாட்டா. பெரும்பாலும் ஜநங்கள் பலாபி ஸந்தியுடனே அவைகளைச் செய்து வருகிறபடியால், சிலருக்கு அவைகளில் நம்பிக்கை இல்லாததுபற்றி நாம் ஏன் அவ்வளவு சோகிக்க வேண்டும்?' என்று மற்றும் சிலர் ஆக்ஷேபிக்கலாம். இந்த ஆக்ஷேபம் அத்ருஷ்டத்தில் விச்வாஸமற்ற நாஸ்திகர்கள் செய்யும் ஆக்ஷேபம் போல முழுவதும் அஸதுவன்று. பல காமனையுடன் செய்யப்படும் கர்மங்கள் ஸாக்ஷாத்தாக சாச்வத ச்ரேயஸ்ஸை ஜநிப்பிக்கமாட்டா என்பது உண்மையே. பலத்தில் எவ்வித நோக்கமுமில்லாமல் கேவலம் பகவதாராதந ரூபமாகக் கர்மங்களை அனுஷ்டிப்பதுதான் உண்மையான ச்ரேயஸ்ஸை உடனே கொடுக்கும். ஆனால் அப்படி பலாபிஸந்தியின்றிக் கர்மங்களை அநுஷ்டிக்கும் அதிகாரிகளாக எவ்வளவு ஜநங்கள் இந்த ஜகத்தில் காணப்படுகிறார்கள்? மிகச் சிலரே யன்றோ? பெரும்பாலும் ஜநங்கள், பலத்தில் ஆசையுடனே கர்மங்களைச் செய்பவர்களல்லரோ? அவர்கள் விஷயத்தில் அம்மாதிரியான கர்மங்கள் ஒருபொழுதும் பகவத் க்ருபைக்குக் காரணமாகமாட்டா என்று சொல்லிவிட்டால் மோக்ஷ சாஸ்த்ரமென்பது ப்ராயேண நிரர்த்தகமாகிவிடும். நமது சாஸ்த்ரம் சொல்வது அது அன்று. பலத்தில் இச்சையுடன் கர்மங்களைச் செய்வது பலாபிஸந்தியில்லாமல் செய்வதைக் காட்டிலும் அபக்ருஷ்டமேயாயினும், பலாபிஸந்தியுடன் செய்யப்படும் கர்மங்களும் மோக்ஷத்திற்குப் பரம்பரையாகக் காரணமாகின்றனவென்றே நமது சாஸ்த்ரங்கள் சொல்லுகின்றன. ஸம்ஸாரிகளாக இருக்கும் ஜநங்களுக்கு ஆயுஸ் ஆரோக்யம் ஐச்வர்யம் முதலியவைகளிலும் புத்ரமித்ர களத்ராதிகளிலும் வாஞ்சை இருப்பது ஸஹஜமே. அந்த வாஞ்சையை நிறைவேற்றிக் கொள்வதற்காக அவர்கள் பற்பல கர்மங்களைச்செய்ய முயல்வதும் ஸஹஜமே. அப்படிமுயற்சி செய்வதால் அவர்கள் ச்ரேயஸ்ஸை இழந்துவிடுகிறார்கள் என்பது இல்லை. 'தம்முடைய ஆகிஞ்சந்யத்தையும், பகவானுடைய ஸர்வ சக்தித்வத்தையும் உணர்ந்து, பகவானுடைய க்ருபையை முன்னிட்டு அவர்கள் தமது மநோரத பூர்த்தியை அந்தப்பகவானிடத்திலேயே ப்ரார்த்திப்பரேயாகில், அந்த மநோரதங்கள் எவ்வளவு அல்பமேயாயினும், கருணாநிதியாயுள்ள பகவான் அந்த மநோரதங்களை யெல்லாம் பூர்ணமாக நிறைவேற்றி, பிறகு பலாபிஸந்தி இல்லாமல் கர்மங்களைச் செய்வதற்கும் தன்னிடத்தில் விசேஷ பக்தியைச் செய்வதற்கும் விதை முதலான ஒரு அநுக்ரஹ விசேஷத்தையும் அவன் தனது க்ருபையைக் கொண்டு கொடுக்கிறான்; அது காரணமாக அந்த ஜநங்களுக்கு மேன் மேல் கர்ம சுத்தியில் திறமை உண்டாகி, கடைசியாக அவர்

களும் பூர்ணமான பகவத் க்ருபைக்குப் பாத்ரமாகிறார்கள்' என்பதே நமது சாஸ்த்ரார்த்தம். இது சாஸ்த்ரார்த்தமில்லாவிட்டால் வாஞ்சா சதங்களால் நாலு பக்கங்களிலும் இழுக்கப்படும் நமக்கு மோக்ஷமென்பதே இல்லாமற் போய்விடும்; தாபத்ரயங்களால் கஷ்டப்படும் நம்மீது அவன் அன்பு பாராட்டி, நமது இச்சைகளைப் பூர்த்திசெய்து வைத்து, அது வழியாக அவன் நம்மைக் கரையேற்றாமற் போனால் அவனுக்குக் கருணாநிதி யென்னும் பெயர்தான் எவ்விதம் ஸித்திக்கும்? ஆகையால் நாம் ஸம்ஸார ஸங்கங்களில் எவ்வளவு மக்நராக இருந்தபோதிலும், நமது அல்ப மநோரதங்களையும் ஸ்ரீ ஶரண்யனிடமிருந்தே நாம் பெறவேண்டும் என்னும் விஸ்வாஸத்துடன் நாம் அவனையே ப்ரார்த்தித்துவரும் பக்ஷத்தில் நமக்கு ரக்ஷணம் உண்டு என்பதில் சங்கையே வேண்டாம். இதுதான் நமது மதத்தின் ஏற்றம். ப்ரக்ருதத்தில் ஹரித்வாரத்தில் கங்கா ஸ்நாநத்திற்காக வந்தவர்கள் பலங்களை உத்தேசித்து வந்தவர்களேயாயினும், 'பகவத் ஸம்பந்தம்பெற்ற நதியில் ஸ்நாநம் செய்கிறோம்' என்னும் எண்ணம் அவர்களுடைய மநத்தின் உள்ளில் இருக்குமேயாகில் அந்த எண்ணமே அவர்களுக்கு க்ரமேண உத்தாரகமாகும் என்பதில் ஆக்ஷேபமில்லை. அபிஸந்திக்கு ஏற்படும் பகவத் ஸம்பந்தமன்றோ உத்தாரக பீஜம்?

இந்த ஸம்மேளந காலத்தில் ஸ்வல்ப ஜநங்களுக்கு ஜந ஸம்மர்த்தத்தால் நாசம் ஸம்பவித்ததாம். அது சோகத்திற்கு ஹேதுவே. ஒருவருக்கும் எவ்வித தீங்கும் நேராமல் இருந்திருந்தால் மிகவும் ஸந்தோஷகரமாக இருந்திருக்கும். ஆனால், கோடிக்கணக்காக ஜநங்கள் சேரும் இடத்தில், ஸ்வல்ப ஜநங்களுக்குக் கூடச் சேதம் ஸம்பவிக்காமலும் இருக்குமோ? எவ்வித சேதமும் ஒருவருக்கும் நேரக்கூடாது என்னும் எண்ணத்துடன் ராஜாங்கத்தார் கணக்கற்ற பூர்வ ஸம்விதாநம் செய்து வைத்திருந்தார்களாம். அந்த ஸம்விதாநங்களெல்லாவற்றையும் சரிவர நடப்பிக்கும்பொருட்டு தர்ம சிந்தையும் சாந்தகுணமும் நிறைந்துள்ள ராஜபுருஷர்களே அவ்விடத்தில் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டிருந்தார்களாம். அந்த அதிகாரிகளெல்லாரும் மிக்க ப்ரீதியுடன் தங்களால் செய்யக்கூடிய ஸஹாயம் எல்லாவற்றையும் எவ்வித ஆலஸ்யமுமின்றிக்குச் செய்தார்களென்றே அங்கு போய்வந்தவர்களெல்லாரும் சொல்லுகிறார்கள். கடுத்த வார்த்தையாவது க்ரூரமான கார்யமாவது ஒன்றுகூட ஜநங்களிடத்தில் அவர்களால் ப்ரயோகிக்கப்படவில்லை என்பதைக் கேட்க நாம் மிக்க ஸந்தோஷம் அடைகின்றோம். ராஜபுருஷர்களெல்லாரும் இம்மாதிரியே மற்றை ஸ்தலங்களிலும் மற்றை காலங்களிலும் ப்ரஜைகளுக்கு ஆநுகூல்யம் செய்வதையே தமது தர்மமாக எண்ணி நடந்து வந்தார்களேயானால், ராஜத்வேஷம் என்பது ப்ரஜைகளிடத்தில் அணுகுமோ? ராஜ்ய பரிபாலநமும் ஆயாஸத்தைக் கொடுக்கக்கூடியதாக ஆகுமோ? இப்பொழுது நமது தேசத்துக்கு ராஜப்ரதிநிதியாக வந்திருக்கும் ப்ரபு இதை உணர்ந்திருக்கிறார் என்றே நாம் எண்ணுகிறோம். மேன் மேலும் அவருக்கு இந்தத் தர்ம சிந்தை வ்ருத்தியாகி வருவதுடன், அவருடைய ப்ரதிநிதிகளும் இப்பொழுது நடந்து வந்தது போல தர்மத்துக்கு ஒத்து நடந்து வரவேண்டும் என்பது-தான் நமது ப்ரார்த்தனை.